பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 09 திங்கட்கிழமை 22.03.2021 கதிர் 137

### இனி இது ரகசியம் அல்ல!

இலங்கை தமிழரசுக் கட்சி அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்து நான் இப்பத்தியில் எழுதினால் ஏதோ தமிழர் ஐக்கியத்தை நான் சிதறடிக்கிறேன் என்று சில பிரகிருதிகள் கிளம்பி விடுகின்றார்கள்.

அதனால் இன்று பக்கம்02 »

## மன்னார் நீதிமன்றம், சிறை, பொலிஸ் எல்லாம் தனது என ஒப்படைக்கக் கோருகின்றது தொல்லியல் திணைக்களம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.20

மன்னார் மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி தமது திணைக்கள ஆளுகைப் பிரதேசத்திற்குள் வருவதனால் அதனை அகற்றித் தருமாறு திணைக்களம் மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸார் அடங்கிய குழுவினர் கடந்த புதன்கிழமை மன்னார் பகுதியில் உள்ள கோட்டை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுற்றுலாத் தளமாக மாற்றுவது தொடர்பில் ஆராய்ந்தமையோடு அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மன்னார் கோட்டை தொல்லியல் அடையாளமாக 1983ஆம் ஆண்டே அரச இதழ் வெளியிடப்பட்டு விட்டது. இவ்வாறு அரச இதழ் வெளியிடப்படும் சமயம் கோட்டையில் இருந்து 400 மீற்றர் தூரம் வரையில் திணைக்களத்தின் ஆளுகைப் ☞2



# கோட்டாவால் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் எனக் கண்டனம்





## யாழில் சுமந்திரன் தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்கள் தொடர்பாகத் தெரிவித்திருந்த கருத்து ஊடகங்களைப் பயப்படுத்தும் நோக்கமாகவே உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞2

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சட்டமா அதிபரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதன்படி, குறித்த தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராக மிக விரைவில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதற்கும் ☞2

## நீதி கிடைக்கும் வரைக்கும் கறுப்பு ஞாயிறு போராட்டம்

### கொழும்பு பேராயர் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படும் கறுப்பு ஞாயிறு போராட்டம் நேற்றும் நடைபெற்றது.

நீதி கிடைக்கும் வரைக்கும் கறுப்பு ஞாயிறு போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்துள்ளார். ☞2



## யாழில் 11 பேர் உட்பட வடக்கில் மேலும் 14 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 11 பேரும், மன்னாரில் மூன்று பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். ☞2



The truly Sri Lankan telecommunication company

LANKA BELL

வேலை வாய்ப்புகள்

லங்கா பெல் உலகத் தரம் வாய்ந்த தொலைத் தொடர்பு நிறுவனம் தமது சேவையை விஸ்தரிக்கும் முகமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கிளை அலுவலகங்களை ஆரம்பிக்கவுள்ளதால் கீழ் குறிப்பிடும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளது.

- முகாமையாளர்கள் / Managers
- உதவி முகாமையாளர்கள் / Assistant Managers

நேர்முகத் தேர்வுகள் இவ்வார இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்கள் கீழ்காணும் மின்னஞ்சலுக்கு தங்கள் சுயவிவரக் கோவைகளை உடனடியாக அனுப்பி வைக்கவும். (விண்ணப்பிக்கும் பதவி நிலையை குறிப்பிடத் தகவறாதீர்கள்)

handy@mail.lankabell.com

மேலதிக விவரங்களுக்கு **காலைக்கதிர் 21.03.2021** பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தினை பார்வையிடவும்.

முகாமையாளர் - மனித வளப்பிரிவு
லங்கா பெல் தனியார் நிறுவனம்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பை இன்னொரு தரப்பின் தலையில் சுமத்தி சில உண்மைகளை அம்பலப்படுத்தி விரும்புகிறேன்.

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் வே.தங்கவேலு (நக்கீரன்), செயலாளர் வின்.மகாலிங்கம் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் இரா.சம்பந்தன் உள்ளிட்டோருக்கு இக்கடிதத்தை வரைந்துள்ளார். கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

வணக்கம். கனடா த.தே.கூ. இன் பொதுச் சபைக் கூட்டம் 2021 மார்ச் மாதம் 07 ஆம் நாள் காணொலி வாயிலாக நடைபெற்றது. சுமார் இரண்டு மணித்தியாலயத்துக்கு மேலாக நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஒளிவு மறைவின்றி முன்வைத்தனர். கூட்ட முடிவில் பின்வரும் முடிவுகளைத் தமிழரசுக் கட்சித் தலைமைக்கு அறிவிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப் பட்டபடி இதனைத் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

கடந்த காலங்களிலும் கனடா த.தே.கூ. உங்களுக்குப் பல யோசனைகளையும் கரிசனைகளையும் முன்வைத்திருந்தது. ஆனால் வழக்கம் போல் அவற்றுக்குப் பதில் கிடைக்கவில்லை. எனினும் முயற்சி திருவினையாக்கும் என்ற நம்பிக்கையில் பின்வரும் கரிசனைகளை உங்கள் பார்வைக்கும் நடவடிக்கைக்கும் கனடா த.தே.கூ. முன்வைக்கிறது.

(1) கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம் அவர்கள் கடந்த 09 செப்தெம்பர், 2020 அன்று தனது விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார். அது கட்சியின் தலைமையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு துணைப் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் 6 மாதங்கள் கடந்தும் ஒரு நிரந்தரப் பொதுச் செயலாளர் நியமிக்கப்படவில்லை. இதனால் கிழக்கு மாகாணத்துக்கு உரிய அந்தப் பதவி அந்த மாகாணத்துக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. கட்சி முடிவுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிலரால் மட்டும் எடுக்கப்படுகின்றன என்ற ஆதங்கம் உள்ளது. எனவே மேலும் காலம் கடத்தாமல் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பொதுச் செயலாளர் பதவியை வழங்க வேண்டும். கட்சிப் பதவிகள் அனைத்தும் இரு மாகாணத்திற்கும் இடையில் சமமாகப் பகிரப்பட வேண்டியது அத்தியாவசியம். தலைவர் வடமாகாணம் என்றால் பொதுச் செயலாளர் கிழக்கு மாகாணத்தில் இருந்து நியமிக்கப்பட வேண்டும் என்ற மரபு கண்டிப்பாகத் தொடர வேண்டும் என வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

(2) வட – கிழக்கில் நாளாந்தம் தமிழ் மக்களுடைய நிலம் – வழிபாட்டுத் தலங்கள் உட்பட அரசின் தொல்லியல் அகழாய்வு மற்றும் பல திணைக்களங்களால் அபகரிக்கப்படுகிறது. இது தொடர்பாக பல வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இந்த நில அபகரிப்பைத் முன்கூட்டியே நிரந்தாரமாகத் தடுத்து நிறுத்தக் கட்சி ஒரு வலுவான திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

(3) ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு முன்னுள்ள தீர்மானத்தை மேலும் மலினப்படுத்தாமல் அது அப்படியே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்துப்பட தமிழரசு, ரெலோ, புளொட் ஆகிய 3 கட்சித் தலைவர்களும் கையெழுத்திட்ட ஒரு கடிதம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்களால் ஐ.நா.ம.உ. பேரவை ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் ரெலோ தலைவர் அடைக்கலநாதன் மட்டும் அந்தக் கடிதத்தோடு தமக்கு உடன்பாடில்லை எனவும், தம்மோடு ஆலோசிக்காமல் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது எனவும் ஊடகங்களுக்கு அறிக்கை விட்டார். இப்படி அவர் த.தே.கூ. இன் தலைமையோடு முரண்படுவதும் அறிக்கை விடுவதும் இது முதல் தடவை அல்ல. ஏன் இந்த முரண்பாடு எழுகிறது? எதிர்காலத்தில் இதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(4) ஊர் மற்றும் பட்டினம் தோறும் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டு அந்தந்த மாவட்டக் கிளையை உருவாக்க வேண்டும் என நீண்ட காலமாகக் கேட்டு வருகிறோம். ஆனால் அது நிறைவேறவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் குகதாசன் வட்டம், ஒன்றியம், மாவட்டம் என கட்சியை மாவட்ட அளவில் பலப்படுத்த முடியும் என்றால் ஏன் மற்றவர்களால் தங்கள் தங்கள் மாவட்டங்களில் அப்படிச் செய்ய முடியவில்லை? கட்சியை மக்கள் மயப்படுத்துவதற்கு கட்சியை அமைப்பு ரீதியாகப் பலப்படுத்துவது அத்தியாவசியம். இதற்குக் கட்சித் தலைமை தடையாய் இருக்காமல் உற்சாகம் கொடுத்துச் செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

(5) கட்சிக்கு ஒரு செய்தித்தாள் இல்லாத குறையை ஈடுசெய்ய புதிய சுதந்திரன் என்ற ஏடு பலத்த ஆரவாரத்தோடு தொடங்கப்பட்டது. ஆனால் தொடங்கின வேகத்தில் அது நின்று போய்விட்டது. கனடா த.தே.கூ. புதிய சுதந்திரனை நடத்த ரூபா 25 லட்சம் கொடுத்து உதவியது. கடைசியாக மொத்த விலையில் அச்சுத்தாள் வாங்க மேலும் ரூபா 10 லட்சம் அனுப்பி வைத்தோம். புதிய சுதந்திரன் நின்று போனதற்கான பொறுப்பு தலைமைக்கு – குறிப்பாகக் கட்சித் தலைவருக்கு – இருப்பதாக நம்புகிறோம். குறைந்த பட்சம் புதிய சுதந்திரனை ஒரு வாராந்தச் செய்தித்தாளாக அச்சிலும் இணைய தளத்திலும் கொண்டு வர உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

(6) கட்சியில் புதிதாக, இளைஞர்கள், சிறந்த செயற்பாட்டாளர்கள் யாரையுமே உள்வாங்காமல் கட்சி ஒரு முதியோர் சங்கம் போல் நடத்தப்படுகின்றது. அதே போல் இளைஞர் அணி, மகளிர் அணி எனப் பெயரளவில் இருக்கின்றனவே ஒழிய செயலில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இல்லை. இதனை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(7) கட்சிக் கூட்டங்கள் என்றுசொல்லி யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து ஒரு சிலரால் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அதற்கான எடுத்துக் காட்டு தமிழர் பேரவை. இது கட்சியின் மேல் மட்டத்தில் கருத்து ஒற்றுமை இல்லாதுள்ளது என்னும் யதார்த்தத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

(8) கட்சிக்கான யாப்பு காலத்திற்கேற்ப புதுப்பிக்கப் படவில்லை. உறுப்பினருக்கான ஒழுக்கக்கோவை உருவாக்கப்படாததால் உறுப்பினர்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமை, நல்லெண்ணம் பாதிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் எதிரிகளைக் குறிவையாமல் தமக்கிடையே தான் மோதுகின்றார்கள். இதையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(9) மாகாண சபைக்கான தேர்தல் விரைவில் வர இருக்கிறது. அதனை எதிர் கொள்ள உரிய ஆயத்தங்கள் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. கடைசியாக நடந்த உள்ளாட்சித் தேர்தலில் த.தே.கூ. பாரிய பின்னடைவைச் சந்தித்தது. அதற்கான காரணங்களைக் கண்டறிய குகதாசன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஆனால் குகதாசன் கையளித்த அறிக்கை தொடர்பாக ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனை விளைவு 2020 பொதுத் தேர்தலில் த.தே.கூ. பெரிய சரிவைச் சந்தித்தது. இருக்கைகள் 14 இல் இருந்து 10 ஆகக் குறைந்தது. வட – கிழக்குத் தமிழ்மக்கள் சார்பாகப் பேசக் கூடிய த.தே.கூ. தகைமை இப்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. நிலைமையை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் மாகாண சபைத் தேர்தலிலும் தோற்க நேரிடும் என்பது வெள்ளிடைமலையே.

(10) பொதுத் தேர்தல் காலத்தில் பகிரங்கமாக வெடித்த உள் முரண்பாடுகள் தொடர்ந்து நிலவுகிறது. அது தொடர்வது கட்சிக்கு அழிவையே தரும். தலைமை மனம்விட்டுப் பேசி உட்பகையை நீக்க வேண்டும். எந்தவொரு கட்சி உறுப்பினரும் கட்சி முரண்பாடுகளை – அபிப்பிராய பேதங்களை – கட்சிக்குள் பேசித் தீர்க்க வேண்டுமே தவிர கட்சிக்கு வெளியே, குறிப்பாக ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தவே கூடாது என்ற கட்டுப்பாடு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தத்தம் சொந்த நலனை முன்னிறுத்திச் சிந்திக்காமல் மக்கள் நலனை முன்னிறுத்திச் சிந்திக்க வேண்டும். ஒட்டுமொத்தத்தில் அனைத்திற்கும் கட்சித் தலைமை பொறுப்பேற்க வேண்டும். முழு இனத்தின் எதிர்காலம் தலைமையின் கைகளில்தான் தங்கியுள்ளது. தங்கள் அர்ப்பணிப்பும் தியாகமும் மதிப்பும் பொருத்தமற்ற செயற்பாடுகளால் அல்லது செயலின்மையால் மழுங்கடிக்கப் படக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம்.

– இதுதான் கடிதத்தில் விடயம்.

தமிழரசின் கணக்கு, வழக்கு உட்பட பல சர்ச்சைகள் இந்தக் கடிதத்தினால் எழுந்துள்ளன.

கடிதத்தில் உள்ள தகவல்களை மட்டும் உள்வாங்கிக் கொள்ளுங்கள். தொடர்விடயங்களை அடுத்து வரும் நாள்களில் பார்ப்போம்.

–மின்னல் –

## நீதி கிடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேர்மையான விசாரணையை நடத்துவதற்கு, அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கடவுளின் தாயின் பரிந்துரைக்காகப் பிரார்த்தனை செய்ய நேற்றிரவு 7 மணிக்குச் சிறப்பு சேவையொன்று ராகமவில் உள்ள பசிலிக்கா தேவாலயத்தில் நடைபெற்றது.

## யாழில் 11 பேர் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 290 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 14 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

3 வீடுகளில் வர்ணப்பூச்சு வேலைக்காக பளையிலிருந்து ஒருவர் வந்து சென்றுள்ளார். அவர் மூலமே இவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் உள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மெலிஞ்சிமுனையில் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே கண்டறியப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

மன்னாரில் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் – என்றார்.

## கோட்டாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'இளைஞர்களின் அரசியல் எதிர்காலம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வேந்தன் கலை கல்லூரி மண்டபத்தில் நேற்று 'இளைஞர்கள் கட்சியை வழிநடத்த வேண்டும்' எனும் தொனிப் பொருளில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களை மிரட்டும் தொனியில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் கேட்கப்பட்டபோதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய தான் எந்த ஊடக அடக்குமுறையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்றும், ஆனால் அவர்களை எவ்வாறு கையாள்வது எனத் தனக்குத் தெரியும் என்ற தோரணையிலும் பேசியுள்ளார். இது ஊடகங்களைப் பயமுறுத்துகின்ற செயற்பாடாகத்தான் நாங்கள் கருதுகின்றோம். முன்னைய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எத்தனையோ ஊடகவியலாளர்கள் மரணமடைந்திருக்கின்றனர், தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றனர், பட்டப் பகலிலே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர், பலர் தாக்கப்பட்டிருக்கின்றார்கள், பலர் நாட்டைவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். எனவே ஊடகங்களை எவ்வாறு அடக்குவது என்று எங்களுக்குத் தெரியும் என ஜனாதிபதி சொல்லுவதில் எங்களுக்கு எந்தவிதமான வியப்பும் இல்லை.

ஆனால் ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான – ஊடக சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கான – ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தலாக – இது இருக்கக் கூடாது, இது அத்தகைய அச்சுறுத்தல் இல்லை என்று ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும். இல்லையெனின் ஊடகங்களை அடக்குகின்ற செயற்பாடாகவ. இதனைக் கணிக்க வேண்டியிருக்கும். – என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் கலந்துகொண்டு ஜனாதிபதியின் கருத்துக்குக் கடும் கண்டனங்களைத் தெரிவித்தார்.

## மன்னார் நீதிமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்பு இப்பிரதேசத்தில் பல வீடுகளும் திணைக்களங் களும் அமைக்கப்பட்டுள்ளபோதும் திணைக்களத்திடம் எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை. எனவே இந்த 400 மீற்றர் பரப்பை தற்போது 3 வலயங்களாக பிரித்து பார்க்கின்றோம். அதாவது 70 மீற்றர் முதலாவது வலயமாகவும், 150 மீற்றர் வரையில் 2ஆம் வலயமாகவும் பிரிக்கப்பட்டமையோடு எஞ்சிய பகுதி 3ஆம் வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதலாம் வலயத்திற்குள் வரும் கட்டுமானமங்கள் முழுமையாக அகற்றப்பட்டே ஆகவேண்டும். 2ஆம், 3ஆம் வலயங்கள் கோட்டைப் பக்கம் முதல்பக்கம் அகற்றித் தர வேண்டும். – எனக்கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது முதலாவது வலத்திற்குள் குறிப்பாக 40 மீற்றர் தூரத்திலேயே பொலிஸ் நிலையம் இருப்பதோடு முதலாவது வலயத்திற்குள் சிறைச்சாலை, பள்ளிவாசல் உட்பட 8 வீடுகளும் அகற்ற வேண்டும் எனத் தெரிவித்ததோடு இரண்டாம் வலயமும் அதன் அண்டிய பகுதியிலும் சுற்றுலாத் தளம் அமைந்த பகுதிகள் இவ்வாறே அகற்றப்பட வேண்டும் இதனால் வீடுகள் தப்பித்தாலும் நீதிமன்றக் கட்டடமும் அகற்றப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

இதனைக் கேட்ட ஏனைய அதிகாரிகள் செய்வதறியாது திகைத்துள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அதிக இடங்களை உரிமை கோரும் தொல்லியல் திணைக்களம் அது தொடர்பில் தமது சட்டத்தை மீறியதாக நீதிமன்றங்களை நாடிய போதும் தற்போது முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஓர் நீதிமன்றத்தினை யும் உரிமை கோருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக சட்டமா அதிபர் தனது மேற்பார்வையில் விசாரணைகளை நடத்தி வருகின்றார். அதேபோல், குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவர்களின் சில அறிக்கைகள் சட்டமா அதிபரின் கைக்குச் சென்றுள்ளன. ஏற்கனவே குற்றப் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனினும், மிக விரைவில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று நம்புகின்றோம்.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தொடர்ந்து சட்டமா அதிபர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார் – என்றார்.

இது இவ்வாறிருக்க, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராக இன்னும் சில நாள்களில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதேபோல், இந்தத் தாக்குதல்களுக்கு காரணமான சந்தேகநபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஊடக சுதந்திரம் என்று கூறப்படுவது அதன் உரிமையாளருடையது அல்ல!

## சமூகத்துடனான கலந்துரையாடலில் கோட்டா தெரிவிப்பு

ஊடக சுதந்திரம் என்பது ஊடக நிறுவன உரிமையாளர்களின் சுதந்திரமல்ல என்றும் சில ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்ற தேவை இருந்தபோதும் அவ்வாறு செய்ய முடியாது என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தான் ஜனாதிபதி என்ற வகையில் ஊடகத் துறைக்கு எவ்வித அழுத்தங்களையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, பல்வேறு குழுக்கள் மற்றும் ஆள்களின் தேவையின் பேரில் பிழையான ஊடக பயன்பாட்டில் ஈடுபட்டு நாட்டையும் மக்களையும் மீண்டும் பாதாளத்துக்குள் தள்ள முயற்சித்தால் அத்தகையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்நிற்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

யுத்த காலத்தில் நாட்டுக்கு எதிராகச் செயற்பட்ட ஊடக குழுவொன்று ஊடக நிறுவனங்களுக்குள் நுழைந்து தேசியத்துக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் எதிராக செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கடந்த சனிக்கிழமை முற்பகல் நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான யோம்புவெல்தென்ன பிரதேசத்தில் இடம் பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' 15 ஆவது நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய போதே ஜனாதிபதி இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தமை நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவாகும். 60 மாதங்களைக்கொண்ட பதவிக் காலத்தில் 16 மாதங்கள் மட்டுமே நிறைவடைந்துள்ளன.

இன்னும் குறிப்பிடத்தக்க காலம் உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றி சிலர் குழப்பமடைந்துள்ளனர். அதுபற்றி எவரும் குழப்பமடையத் தேவையில்லை. என்பதுடன், அதனை தீர்மானிப்பது மக்களேயாவர். எஞ்சியுள்ள பதவிக் காலத்தில் தேசிய பொருளாதாரத்தையும் கிராமிய மக்களையும் முன்னேற்றுவதற்கு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதிகாரிகளின் பொறுப்பு மக்களின் வாழ்க்கைக்கான வழிகளை செய்து கொடுப்பதாகும். ஒருபோதும் அவர்களுக்கு கஷ்டங்களை கொடுக்கக்கூடாது. மக்கள் வாழ்க்கை நிலைமைகளை பாதிக்கும் வகையிலான எவ்வித செயற்பாடுகளையும் அரச அதிகாரிகளிடம் தான் எதிர்பார்க்கவில்லை.

நான் ஒருபோதும் சுற்றாடலுக்கு அழிவை ஏற்படுத்தவில்லை. நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்த காலப் பகுதி முதல் சுற்றாடல் பாதுகாப்பிற்காக எவருமே செய்யாத பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். சுதந்திர சதுக்கம் கூட அன்று குப்பைமேடாக காணப்பட்டது. அந்த நிலைமையை இல்லாமல் செய்து கொழும்பு நகரத்தை பசுமை பூங்காவாக மாற்றினேன். சுற்றாடலுக்காக எதையுமே செய்யாதவர்கள் என்னை நோக்கி விரல் நீட்டுகின்றமை கவலைக்குரியதாகும்.



வறுமையை ஒழித்து கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவது அரசாங்கத்தின் முக்கிய கொள்கையாகும். 75 வீதமாக உள்ள கிராமிய மக்களில் 35 வீதமானோர் நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். விவசாயத்துறையின் முன்னேற்றத்து தேவையான அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி கிராமிய மக்களை வறுமையில் இருந்து விடுவிக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## பல்கலைக்கழகங்களை மீண்டும் ஆரம்பிக்க சுகாதார அமைச்சுடன் கலந்துரையாட தயார்!

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக, சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடலை ஆரம்பிக்கத் தயார் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி அடுத்தவார முற்பகுதியில் இந்த கலந்துரையாடலை மேற்கொள்ள முடியுமென ஆணைக்குழுவின் தலைவரான, பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக, மாணவர்களின் விடுதி பயன்பாடு, சுகாதார பாதுகாப்பு, விரிவுரையாளர்களின் சுகாதார பாதுகாப்பு என்பன தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைவாக விரைவான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் குடியரசு தினத்துக்கு இராணுவத் தளபதிக்கு அழைப்பு!

பாகிஸ்தானின் குடியரசுத் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 81 ஆவது குடியரசுத் தின நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில், இதற்காக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பாகிஸ்தான் சென்றுள்ளமையுடன், அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் குடியரசு தினத்தில் கலந்துகொள்ளும் முதல் இலங்கை இராணுவத் தளபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவக்காலச் சிந்தனை



### நல்வார்த்தைகள் எம் வாழ்வோடு சங்கமிக்கட்டும்

யாரிடம் செல்வோம் இறைவா வாழ்வு தரும் வார்த்தைகள் யாவும் உம்மிடம் தானே உள்ளது என்ற நம்பிக்கையுடன் இறை வார்த்தையை சுவைப்பவர் அதன் வழி நடக்க முயலும் போது ஏற்படும் அனுபவம் நல்வழிகாட்டும் நம்பிக்கை வாழ்வுக்கு நகர்த்தி செல்லும் என்பதை வாழ்வோடு சங்கமிக்கும் போதுதான் அதனை அனுபவிக்கவும் முடியும்.

வார்த்தையான இறைவா எம் வாழ்க்கையோடு வாழ வரம் ஒன்று வேண்டும் எமக்கு, சோதனைகள் வென்று சாதனைகளைப் படைக்க அருள் ஒன்று போதும் எமக்கு என்ற மன உணர்வுடன் வாழபுவை புதுப்பிக்கும் இத் தவக்காலம் எம் மனங்களில் இறை வார்த்தைகள் தினம்தினம் எம்மை புதுப்பிக்க கிடைத்த வழிகளே.

எம்மை பிறர் பாராட்டும் வார்த்தைகள் எமது வாழ்வை ஊக்கப்படுத்தும் இது போலவே எம் உறவுகள் கணவன், மனைவி பிள்ளைகளுடனான உறவிலும் தொழிலகங்களில் ஊக்கப்படுத்தும் வார்த்தைகளும் நட்பு வட்டத்தில் ஏற்படும் உரையாடலும் நம்பிக்கை தரும் வார்த்தைகளால் உங்கள் சூழலை நல்வழிப்படுத்த உங்களால் முடியும்.

நாவடக்கம் நல்ல சூழலை உருவாக்கும் இறைவார்த்தைகள் எம் வாழ்வோடு சங்கமித்தால் அவை எமது உரையாடல் உறவாடலிலும் நல்வார்த்தைகளாக வெளிப்படும்.

ஒரு பல்கலைக்கழகத்தல் விஞ்ஞான கற்கை நெறி மாணவர்களுக்கு விரிவுரையாளர் ஓர் பயிற்சி வைத்தார் தோட்டத்தில் ஒரு பக்கம் சென்று, 15 மாணவர்கள் பூக்கண்டுகளை புகழ்ந்து பாராட்டி மரங்களோடு உரையாடப் பணித்தார். அதே போலவே சக 15 மாணவர்களை மறுபக்க பூக்கன்றுகளைத் திட்டி தீர்த்து உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள் என சம உரங்கள், நீர்ப்பாச்சல்கள் வழங்கிய தோட்டத்தை 20 நாள்களின் பிக் பார் வையிட்டனர் பூத்துக் குலுங்கும் அழகை வாடி வதங்கும் மறுபக்கத்தை மதிப்பீடு செய்ய மாணவர்களின் இந்த சோதனை பரீசிக்கப்பட்டது மிக வும் சுகதேகியாக நோயற்ற மாணவர் கள் முதல் பகுதியினராகவும் புதிய பல நோய் காரணிகளாக மறு பகுதியினரின் சோர்வு நிலையும் ண்டதை மாணவர்கள் உணர்ந்து தமது உரையாடல் உறவாடலினால் ஏற்படும் பாதிப்புக்கள் பிறசூழலை மட்டுமல்ல தமது உடலுளத்தையும் பாதிப்பதுடன் தோற்ற மாற்றம் அழகிழந்த நிலையை உணர்ந்தனர்.

இதுவே எமது வீட்டிலும் சூழலிலும் கிராம முன்னேற்றங்களிலும் எமது நட்புறவாடல் சிறுவர் முதியோர் இளையோரின் வெளிப்பாடுகளாக வெளிப்பட காரணியாகிறது. எமது ஆன்மீக தேடலும் எமது குடும்க சமூக சூழலில் பல மாற்றங்களை உருவாக்க முடியும் முதலில் எமது ஆன்மீன வெளிப்பாடுகள் எம்மில் இருந்து மாற்றம் பெற மாற்றத்தின் தூதுவர்களாக நம்பிக்கையூட்டும் நற்செய்திகள் நல்வாழ்வின் முதற்படியாக சிலுவை பாதை பயணத்தை புனிதப்படுத்தும் வார்த்தைகளாக வாழ்வாக்க நல்லுறவாடலால் நம்பிக்கை வாழ்வை மலர தவப்பயணம் இன்றே தொடரப்படும்.

**- அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்.**

## நேர்மனப்பாங்குடனான செயற்பாடுகள் மூலம் நீர் வளத்தைப் பாதுகாப்போம்

நீர் வளத்தின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி உலக நீர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இச் சபையானது உலக நீர்தினத்தை வருடாந்தம் பல் வேறு தொனிப்பொருள்களைப் பரிந்துரை



செய்து வருகின்றது 2021 ஆம் ஆண்டு தொனிப் பொருளாக பெறுமதியான நீர் Valuing Water என்பதாகும்.

எமது நாட்டினைப் பொறுத்த வரையில் நீர் வளத்தைப் போசித்துப் பாதுகாப்பதில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட நாடாக விளங்குவது ஆச்சரியமிக்கதாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் நீர்வளத்தின் பங்களிப்பு முதன்மையானதாகும்.

இன்று காலநிலை மாற்றத்தின் (Climatr Vhange) எதிர்விளைவுகள், அதிகரித்துவரு சனத்தொகையின் நீர்வள நுகர்வு போன்ற எதிர்கால சவால்களை ஆரோக்கியமாக எதிர்கொள்ளல் தொடர்பில் உலக நாடுகளின் கவனம் தற்போது அதிகரித்து வருகின்றது.

நீர்வள அபிவிருத்தியில் பேண்தகு நிலைமையினை ஏற்படுத்தி உணவில் போதுமான தன்மையினை உருவாக்கி நாட்டினை சுபீட்சமான அபிவிருத்திப் பாதையில் முன்நோக்கி நகர்த்துவது எமது பணியாகும்.

2025 ஆம் ஆண்டில் அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டத்தினை அரசு மேற்கொண்டு வருவதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

குறிப்பாக பாடசாலைகளுக்கூடாக நீர்வள விரயத்தை குறைப்பதற்கான உத்திகளை நேர் சிந்தனை மனப்பாங்குடனான செயற்பாடுகளுக்கு ஊடாகவும் விவசாய செயற்பாடுகளில் நீர்வளப் பயன்பாட்டினை வினைத் திறனாகவும் மேற்கொள்வதற்கு வழிகாட்டுவதும் எம் அனைவரினதும் பொறுப்பாகும் என்பதை இந்நாளில் உணர்ந்து செயற்படுவோம்.

**வ.சசிகுமார் (ஆசிரியர்)**
**கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தெரிந்தே செய்யும் தமிழர்!

**'தன் வினை தன்னைச் சுடும்; ஒட்டப்பம் வீட்டைச் சுடும்' என்றார் பட்டினத்தார்.**

**இன்று ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை சந்திக்கப்போகின்ற நெருக்குவாரம் – பின்னடைவு – கூட இலங்கை தானாகத் தேடிக் கொண்ட வினைதான். தமிழரின் வாழ்வியலில் முள்ளிவாய்க்கால் வரை கொழும்பின் படைகள் சொருகிய ஒட்டப்பம்தான் இப்போது இலங்கை வீட்டை எரிக்கும் விவகாரமாக ஜெனிவாவில் பற்றியிருக்கின்றது.**

**ஜெனிவாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்த தமரா குணநாயம் அம்மையார் இவ்விடயங்களை ஒட்டி சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அவை கவனிக்கத் தக்கவை.**

**★ சீன எதிர்ப்புக்காக இலங்கையைப் பயன்படுத்துகின்றது மேற்குலகம்.**

**★ தமிழ் மக்களின் விடயங்கள் இதற்கான துரும்புச் சீட்டாக மாற்றப்பட்டுள்ளன. ஆகவே தமிழ் மக்கள் அதனைப் பூரணமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.**

**– இப்படி எல்லாம் கருத்து வெளியிட்டிருக்கின்றார் அம்மையார். அவர் கூறுவது சரியாக இருக்கலாம். அதுவே உண்மை நிலையாகவும் கூட இருக்கலாம்.**

**ஆனால் இவை எவையும் தெரிந்து கொள்ளாமல் – அல்லது புரிந்து கொள்ளாமல் – ஜெனிவா விடயத்தில் தமிழர் தரப்பு மேற்குலகின் பக்கம் சார்ந்து நிற்கின்றது என்று அவர் கற்பனை பண்ணக்கூடாது. தெரிந்து கொண்டுதான் – விளங்கிக் கொண்டுதான் – இத்தகைய காய் நகர்த்தலுக்குள் தமிழர் தரப்பு இறங்கியுள்ளது – ஈடுபட்டுள்ளது – என்பதை தமரா குணநாயகம் அம்மையார் முதலில் புரிந்து கொள்வது நல்லது.**

**இன்று நேற்றல்ல, 2009 இல் யுத்தம் முடிவுற்ற காலத்தில் இருந்தே, இந்த விவகாரம் ஜெனிவாக் களத்தில் பந்தாடத் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே இந்தப் புரிதலுடன்தான் விடயத்தை தமிழர் தரப்பு கையாண்டு வருகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.**

**ஏற்கனவே இப்பத்தியில் அண்மையில் நினைவூட்டப்பட்ட விடயம்தான் இது. 2012 மே மாதம் 27ஆம் திகதி மட்டக்களப்பில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில், தலைமைப் பதவியை ஏற்ற பின்னர் தாம் நிகழ்த்திய தலைமைப் பேருரையில் அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறியிருந்தார்.**

***"இந்தப் பூலோகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் நியாயத் தராசில் வைத்து நிறுக்கப்படுவதுமில்லை, ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகளைப் பற்றியும் பறைசாற்றுகின்ற உலகப் பெரும் சக்தி எல்லோரும் நீதி தேவர்களும் அல்லர். அனைத்துலக வல்லரசுகளும் அவற்றைச் சார்ந்து இயங்கும் சக்திமிக்க உலக நிறுவனங்களும் – ஏதோ தமது நலன்களை எல்லாம் பணயம் வைத்துவிட்டு எமக்காக இரங்கி வந்து, எமது உரிமைகளைப் பெற்றுத் தரப் போகின்றன என்றும் நாங்கள் நம்பவில்லை. இருந்த போதும் – அண்மைக் காலங்களில் மோசமான மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகம் வெறுமனே கைகட்டி மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதும் நாங்கள் யதார்த்தத்தில் தொடர்ந்து அவதானித்துவரும் உண்மைதான். அதனால், தமது தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து அவர்கள் நிகழ்த்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக, அவர்களது மனிதாபிமான உள்ளுணர்விற்கும் தேச நலன் சார்ந்த முனைப்பிற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில், எமது நலன்களும் பாதுகாக்கப்படலாம். அதற்கு உகந்த சூழலை நாம்தான் பேணவேண்டும். கனிந்து வரும் சூழலைக் குழப்பாமல், அனைத்துலக சமூகத்தை அசௌகரியப்படுத்தாமல், நிலைமையை நாங்கள் பக்குவமாகக் கையாள வேண்டும்"*** **– என்றார் சம்பந்தர்.**

**அவர் கூறியபடி, சர்வதேசங்களும் தங்களின் தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து நடத்தும் சதுரங்க ஆட்டம்தான் ஜெனிவாவில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும். அவர்களின் அந்த ஆட்டத்தில் அவர்களின் தேச நலன்சார்ந்த முனைப்பிற்கும், எங்கள் விடயத்தில் அவர்களின் மனிதாபிமான உள்ளுணர்விற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில் எமது நலன்கள் குறித்தும் பேசப்படும் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.**

**அந்தச் சந்தர்ப்பத்தை நாம் வசமாக – வாய்ப்பாக – பயன்படுத்துவதுதான், பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் தொடர்ந்து அடக்கி, ஒடுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, ஏமாற்றப்பட்டு வரும் தமிழினத்துக்கு உள்ள ஒரே தெரிவு. சம்பந்தன் கூறியபடி நாம் அதனைப் பக்குவமாகக் கையாண்டு, தமிழர் தேச நலனை முன்னிறுத்தி, தந்திரோபாயமாகச் செயற்பட வேண்டும். எம்மை அடக்கி ஆளும் பௌத்த, சிங்கள வெறிப் போக்கு தேசத்தின் நலனை முன்னிறுத்தி அல்ல. தமிழர்களாகிய நம் முன்னால் உள்ள ஒரே தெரிவு அது மட்டுமே என்பதை தமரா குணநாயகம் அம்மையார் மட்டுமல்லர், முழுத் தென்னிலங்கைச் சிங்கள, பௌத்த பேரினவாதமுமே புரிந்து கொள்ள வேண்டும்.**

# அரசின் தவறை மறைக்கவே புதிய சர்ச்சை உருவாக்கம்!

## வீரசேகர கபடப் பேச்சு என்கிறார் அநுர



கொழும்பு, மார்ச் 22

அமைச்சர் சரத் வீரசேகர, அரசாங்கத்தின் தவறுகளை மறைப்பதற்காக புதிய விவகாரங்களை உருவாக்குகிறார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குல் சம்பவம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும்போதே அநுர குமார திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அநுர மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சரத் வீரசேகர வெளியிடும் கருத்துக்கள் சிறுப்பிள்ளைத் தனமாகக் காணப்படுவதுடன் பாரதூரமானவையாக இருக்கின்றன.

மேலும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, சுமார் 15 மாதங்களாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்போது இந்த விவகாரம் தொடர்பாக என்னிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென எவரும் குறிப்பிடவில்லை.

இந்நிலையில் , என்னிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் திடீரென சரத் வீரசேகரவுக்கு வருவதற்கான காரணம் என்ன?' என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கையில் ஆவணப் படம்!

விடுதலைப்புலிகள் செய்த போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆவணப்படம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல்முறையாக சர்வதேச அரங்கில் திரையிடப்பட்டது.

இது நேற்று பிரிட்டன், அமெரிக்கா, சுவீடன், கனடா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் காட்சியிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தை எதிர்காலத்தில் பிற நாடுகளிலும் திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை குறித்த வாக்கெடுப்பு இன்று நடைபெற உள்ளது நிலையில் இந்த ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன சிறுவன் பாதுகாப்புடன் வீட்டுக்கு!

கொழும்பு, இரத்மலானை பகுதியில் காணாமல்போனான் எனக் கூறுப்பட்ட 16 வயதுடைய சிறுவான் பாதுகாப்பாக வீடு திரும்பியுள்ளான் என அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த சனிக்கிழமை 10 மணியளவில் தனது மகன் வீட்டுக்கு வருகைத் தந்தான் என சிறுவனின் தாயார் கூறினார்.

தனக்கு தனிமையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதை அடுத்து, தான் வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என சிறுவன் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை – தஹாம் மாவத்தையில் வசித்து எல்டன் டெவோன் கெனி எனப்படும் 16 வயதுடைய மாணவன் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை காணாமல் போயுள்ளார் என அவரது தயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தார்.

காணாமல் போயுள்ள மாணவனின் தந்தை வெளிநாட்டில் தொழில் புரிந்து வருவதுடன் , அவர் தனது தாயுடன் வாழ்ந்து வந்துள்ளான்.

இந்நிலையில் , தரம் – 11 இல் கல்வி கற்கும் குறித்த மாணவன் காணாமல்போன தினத்தன்று பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கறுப்பு நிற ஆடையணிந்து வெளியேறினான் என அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்காக காரணம் குறித்து மகன் தன்னிடம் எதனையும் அறிவிக்கவில்லை என்று தாய் தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவனை கண்டுபிடிப்பதற்காக 4 பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மகிழ்ச்சியான நாடுகளில் இலங்கைக்கு 129ஆம் இடம்

கொழும்பு, மார்ச். 22

சர்வதேச மகிழ்ச்சி தினத்தையொட்டி ஐ.நாவின் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் வலையமைப்பால் 149 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உலக மகிழ்ச்சியான நாடுகள் தொடர்பான வருடாந்த மதிப்பீட்டுப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தனிநபர் சுதந்திரம், மொத்த தேசிய உற்பத்தி, ஆயுட்காலம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்ச்சியான நாடுகள் தொடர்பான பட்டியல் ஒவ்வொரு வருடமும் தயாரிக்கப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த முறைவெளி யான மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் 130 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இம்முறை முன்னேறி 129 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, உலகில் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், டென்மார்க் இரண்டாம் இடத்தையும், சுவிற்ஸர்லாந்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அத்துடன் 1 முதல் 10ஆம் இடம் வரையிலான நாடுகளில் 9 நாடுகள் ஐரோப்பிய நாடுகளாகும். அதேவேளை, ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் முன்னணியில் உள்ளது. இதன்படி பட்டியலில் 32ஆவது இடத்தில் அந்த நாடு உள்ளது.

அத்துடன் பட்டியலில் 149 இடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நில அபகரிப்பு என்பது ஓர் இனப்படுகொலை!

## விக்னேஸ்வரன் கடும் சீற்றம்

மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் சமாதானத்தை அடைய முடியாது, அதே போல, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சமாதானம் அவசியம். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ளன. நில உரிமைகள் மிக முக்கியமான மனித உரிமைகள் ஆகும். ஓர் இனத்தின் அடையாளம், வாழ்வு, செழிப்பு ஆகியவற்றின் உயிர் மூலமாக இருப்பது அந்த இனத்தின் பாரம்பரிய நிலம். வடக்கும் – கிழக்கும் எமது பாரம்பரிய பிரதேசங்கள். வடக்கும் – கிழக்கும் எமது தாயகம். எமது இந்த தாயக நிலம் எம்மிடம் இருந்து அபகரிக்கப்படுவது என்பது எமது இனம் அழிக்கப்படுவதற்கு சமனானது. ஆகவேதான் நில அபகரிப்பு ஓர் இனப்படுகொலை ஆகின்றது.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு, 'தமிழர் தாயகத்தை இழத்தல்' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாடு இலங்கை நேரப்படி கடந்த சனிக்கிழமை மாலை சூம் தொடர்பாடல் ஊடாக இடம்பெற்றிருந்தது.

அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு–

வடக்கு – கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம், வாழ்க்கை மற்றும் அடையாளம் ஆகியவற்றை நிர்மூலம் செய்துவரும் நில ஆக்கிரமிப்பில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கும், அதனை தடுப்பதற்குமான வழிவகைகளை ஆராயும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் மூத்த அரசியல் தலைவருமான ஆர். சம்பந்தன் கலந்துகொண்டிருக்கின்றமை மிகவும் பொருத்தமானது. என்னை அரசியலுக்கு கொண்டுவந்த சம்பந்தனுடன் இணைந்து இந்த மாநாட்டை நான் ஆரம்பித்து வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த மாநாட்டில் எமது அழைப்பை ஏற்று முதன்மை உரை ஆற்ற வந்திருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான கலாநிதி நவநீதம் பிள்ளை உட்பட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்து அனைவரையும் வரவேற்கின்றேன்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் சுதேச (முதலாவது) குடிமக்கள். 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நாம் இந்த நாட்டில் வாழ்ந்துவருகின்றோம். அந்நியர்களின் காலனியாதிக்கம் 1505 ஆம் ஆண்டு ஏற்படும்வரை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் நிலப்பரப்பு தமிழ் மன்னர்களின் முழுமையான ஆளுகையின் கீழ் செழிப்பாக இருந்தது. பிரித்தானியர்களின் ஆட்சியின்போது 1833 ஆம் ஆண்டு இலங்கையின் நிர்வாகம் ஒன்றாக்கப்பட்டு பின்னர் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின்னர் அதிகாரம் சிங்கள மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் எமது நிலங்கள் அதிகாரப் பலத்தின் மூலம் சிங்கள அரசாங்கங்களால் அபகரிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1970 களில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் கிழக்கு மாகாணத்தின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு என்பது சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு பெரும் யுத்தமாக இன்று மாறியிருக்கிறது. நிலம் மட்டுமன்றி, நிலத்துடன் சேர்த்து, எமது வாழ்வும், அடையாளமும், வரலாறும் சேர்த்தே அழிக்கப்படுகின்றன. இது மிகப்பெரும் மனித உரிமை மீறல் ஆகும். அரசாங்கங்கள் மேற்கொண்ட இந்த மனித உரிமை மீறல்களே தமிழ் மக்கள் தமது நிலத்தையும், வாழ்வையும் , அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு ஒரு பெரும் இன அழிப்புடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும், எமக்கு எதிரான நில ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் நிற்கவில்லை. மாறாக, மேலும் தீவிரம் அடைந்துள்ளது. எமது மக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவம், வடக்கு கிழக்கில் தற்போது எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளது. அபிவிருத்தி, தொல்பொருள் ஆய்வு, காடுகள் ஒதுக்கீடு, வனவிலங்குகள் சரணாலயம், பறவைகள் சரணாலயம் என்ற போர்வைகளில் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, காட்டிலாகா, வீடமைப்பு அதிகாரசபை ஆகிய திணைக்களங்கள் உட்பட பல்வேறு அரச திணைக்களங்கள் எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு யுத்தத்தில் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளன.

இதனை அண்மையில் அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவனம் வெளியிட்ட 'முடிவற்ற போர்' என்ற ஆய்வு அறிக்கையில் ஆதாரங்களுடன் வெளியிட்டது.

இலங்கையில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு பற்றி ஆராய்ச்சி செய்த இஸ்ரேலிய அறிஞரான ஓரன் யிட்ச்பச்சேல் என்பவர் இலங்கையை ஜனநாயக நாடு என்று விவரித்திருக்கிறார். தனி ஓர் இனத்தின் மேலாதிக்கத்தை நாடு முழுவதும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் அரசுகளை இனநாயக நாடு என்று அவர் விளக்கம் அளிக்கிறார்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தமை முதல் மிகவும் நுட்பமான முறையில் ஒரு ஜனநாயக நாடாக கட்டமைக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் இத்தகைய ஜனநாயக கட்டமைப்பே இந்த நாட்டில் ஸ்திரமற்ற தன்மை, இன முரண்பாடுகள், ஆயுத யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறல்களுக்கு காரணமாக இருந்து வருகின்றது. ஆகவே, இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சிகளோ, பொறுப்புக்கூறல் முயற்சிகளோ அல்லது நீதிக்கான முயற்சிகளோ வெற்றி அளிக்கப்போவதில்லை. இதனை சர்வதேச சமூகம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் சமாதானத்தை அடைய முடியாது, அதேபோல, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சமாதானம் அவசியம். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ளன. நில உரிமைகள் மிக முக்கியமான மனித உரிமைகள் ஆகும். ஓர் இனத்தின் அடையாளம், வாழ்வு, செழிப்பு ஆகியவற்றின் உயிர் மூலமாக இருப்பது அந்த இனத்தின் பாரம்பரிய நிலம். வடக்கும் – கிழக்கும் எமது பாரம்பரிய பிரதேசங்கள். வடக்கும் – கிழக்கும் எமது தாயகம். எமது இந்த தாயக நிலம் எம்மிடம் இருந்து அபகரிக்கபப்டுவது என்பது எமது இனம் அழிக்கப்படுவதற்கு சமனானது. ஆகவேதான் நில அபகரிப்பு ஓர் இனப்படுகொலை ஆகின்றது.

அதனால்தான், எமது பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கையும் – கிழக்கையும் பாதுகாக்கும் வழிமுறைகளை, சவால்களை ஆராய்வதற்காக 'தமிழர் தாயகத்தை இழத்தல்' என்ற தலைப்பில் இன்றைய இந்த சர்வதேச மாநாட்டை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த மாநாடு ஓர் ஆரம்பம். எமது நிலத்தை நாம் பாதுகாப்பதற்கு சர்வதேச மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் நாம் மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளையும், உபாயங்களையும் வகுத்து செயற்படும் பொருட்டு தொடர்ச்சியாகப் பல நிகழ்வுகள் நடைபெறும். எமது இந்த நில மீட்பு போராட்டத்துக்கு சர்வதேச சமூகம் எல்லாவகையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன். – என்றார்.

# நல்லைக் குருமணியின் 40 ஆவது குருபூசை தினம்



கதாப்பிரசங்கம் செய்தே சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்த நல்லைக்குருமணியின் 40 ஆவது குருபூசைத்தினம் இன்றாகும். நல்லூரிலே ஆதீனம் அமைத்து முருகப் பெருமானுடைய திருவருட் கருணையினாலே யாழ்.குடாநாட்டிலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களிலும் பிரசங்கம் செய்து சேவையாற்றிய முதலாவது குருமஹாசந்நிதானம் அவர்களுடைய குருபூசை இன்று பகல் பொழுதிலே குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளன.

இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்களுடைய அருளாசியுடனும் பெரும் பங்களிப்புடனும் இன்று ஆதீனத்திலே இக் குருபூசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

1966 இல் அமைக்கப்பட்ட ஆதீனமானது இப்பொழுது மிகச் சிறப்பான முறையிலே இயங்கி வருகின்றது. கோயில்களிலே நடைபெறுகின்ற கும்பாபிஷேகங்களிலே அருளாசியுரை வழங்குகின்றமையுடன் திருவிழா நடைபெறத் தம்மாலான முழு ஒத்துழைப்பையும் குரு மகா சந்நிதானம் வழங்கியும் வருவது குறிப்பிடத்தக்கது.

1981 இல் இறைபதம் பெற்ற முதலாவது குருமகா சந்நிதானம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஈழத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று கதாப்பிரசங்கம் செய்தமை சிறப்பம்சமாகும். இலங்கையிலே எவ்வாறு கதை செய்தாரோ அதே போன்று இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலிய இடங்களிலும் கதை செய்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலே நடைபெறுகின்ற 40 ஆவது குருபூசை நிகழ்வுகளிலே கலந்து கொள்ளும் வண்ணம் அனைத்து அடியார்களையும் அழைக்கின்றோம்.

**- கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# ஜெனிவாத் தீர்மானங்களில் சிலவற்றுக்கு உள்ளகப் பொறிமுறையின் கீழ் தீர்வாம்!

## வழிக்கு வருகின்றார் சரத் வீரசேகர




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

30 வருட கால சிவில் யுத்தம் இலங்கையின் சுதந்திரத்துக்காகவே முன்னெடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் போராளிகள் தொடர்பாக மாத்திரம் கவனம் கொள்ளும் மேற்குலகம் யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைத் தவிர்த்து ஏனைய மாகாணங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் உயிரிழந்த அப்பாவிப் பொது மக்கள் தொடர்பில் கவனம் கொள்ளாதமை கவலைக்குரியது.

எந்த நாடுகளையும் பகைத்துக் கொள்ளாமல் ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும். தீரமானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில விடயங்களை நாட்டின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசமைப்பிற்கு உட்படுத்தி உள்ளக பொறிமுறை ஊடாகச் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அமைச்சர் சரத் வீரசேகர இதனைக் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir




# நீரின்றி அமையாது உலகு

நீரே வாழ்க்கை நீர் இன்றி எந்த உயிரினமும் வாழ முடியாது. எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் நீர் முக்கிய பங்கு வகிக்கின்றது. நீரின் முக்கியத்துவம் கருதியும் தூய நீர் வளங்களின் நிலைபேறான முகாமைத்துவம் கருதியும் 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமையத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்திற்கு அமைவாக 1993 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 22 ஆம் திகதியை 'உலக நீர் தினம்' ஆகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடமும் இன்று 22.03.2021 ஆம் திகதி உலக நீர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

தரமான தூய நீரைப் பெறுதல் மற்றும் உலக நீர் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இத்தினம் கொண்டாடப்படுகின்றது. மேலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) 6 ஆவது பிரிவிற்கு அமைவாக நீர் மற்றும் சுகநல பாதுகாப்பு வசதிகளை 2030 ஆம் ஆண்டளவில் யாவரும் பெற்றுக் கொள்வதற்கு உதவும் பொருட்டும் உலக நீர் தினம் பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### உலக நீர் வளப்பரம்பல்

உலக நீர்வளப் பரம்பல் தொடர்பான விபரங்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

| நீர்வள மூலம் | வீதம் (%) |
|---|---|
| கடல் நீர் | 97% |
| நன்னீர் | 03% |
| மொத்தம் | 100% |

அட்டவணை – 01 இல் காட்டியவாறு 3% மான நன்னீரில் 0.5% மான நிலத்தடி நீர் மட்டுமே எமது நாளாந்தப் பாவனைக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. மீதி 2.5% மான நீர் பனிக் கட்டி மற்றும் பல்வேறு காரணங்களால் அதனை எம்மால் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இதிலிருந்து தெளிவாக விளங்குவது யாதெனில் உலக மொத்த நீர்வளத்தில் 0.5% மான நீர்வளம் மட்டுமே உலக மொத்த மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் உலகத்தில் நீர்த்தட்டுப்பாடு இயற்கையாகவே ஏற்பட்டு அது உலக நீர்ப் பிரச்சினையாக/நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு ஏதுவாக தந்திரோபாயமான சிந்தனையும், தந்திரோபாயத் திட்டமிடலும் மிகவும் அவசிய தேவையாக கருத்தில் கொள்ளப்பட்டு வருகின்றது. அதாவது அருமையான / அருந்தக் கூடிய நீரை யாவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விரைவான மற்றும் வினைத்திறனான நீர்முகாமைத்துவம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. இதன் மூலமே எதிர்காலச் சமுதாயத்தை நீர் நெருக்கடியிலிருந்து பாதுகாக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### துறை ரீதியான உலக நீர்ப்பாவனை

மேலே அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்டவாறு 0.5% மான நீர்வளம் துறை ரீதியாக எவ்வாறு உலக மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதனையும் நாம் ஆராய முடியும். இதற்கு அமைவாக உலக மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் 0.5% மான நீரை 100% என எடுத்துக் கொள்வோமாயின் துறை ரீதியாக அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் அந்நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான தந்திரோபாயங்களும் அட்டவணை 2இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 02**

| துறை | வீதம் | தந்திரோபாயம் |
|---|---|---|
| விவசாயத்துறை | 70% | பங்களிப்புடனான நீர்ப்பாசன முகாமைத்துவம் (PIM) |
| கைத்தொழில் துறை | 19% | சிக்கன நீர் முகாமைத்துவம் |
| வீட்டுத்துறை | 10% | சிக்கன நீர் முகாமைத்துவம் |
| ஏனையவை | 01% | கட்டுப்பாட்டு நீர் முகாமைத்துவம் |

மேலே அட்டவணை 2 இல் காட்டியவாறு பொதுவாக உலக ரீதியில் விவசாயத் துறைக்கு அதி கூடுதலான (70%) நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை தெளிவாகின்றது. எனவே விவசாயத்துறை நீர்ப்பயன்பாட்டில் விவசாயிகளின் பங்களிப்புடனான நீர்ப்பாசன முகாமைத்துவத் தந்திரோபாயத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துவதன் மூலம் நீர் விரயமாக்கப்படுவது தடுக்கப்படுவதுடன் நீரின் உற்பத்தித்திறனும் அதிகரிக்க வாய்ப்புண்டாகும். அதேபோல ஏனைய துறைகளினால் பயன்படுத்தப்படும் நீரின் அளவையும் அவற்றிற்கு எதிரே (அட்டவணை 2 இல்) குறிப்பிடப்பட்டுள்ள தந்திரோபாயங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் உலக நீரை வினைத்திறனாகப் பயன்படுத்த வழிபிறக்கும்.

### நீர் மதிப்பீடு தொடர்பான வரைவிலக்கணம்

நீரினால் ஏற்படும் பல்வேறுபட்ட நன்மைகள் மற்றும் ஆபத்துக்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டும் பொருளாதார சமூக மற்றும் பல்வேறுபட்ட கலாசார சமய விடயங்களை உள்ளடக்கியதான அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயற்பாடே 'நீர் மதிப்பீடு' என வரைவிலக்கணப்படுத்த முடியும்.

உலகப் பொருளாதாரத்தில் நீர் என்பது 'உயிர்நாடி' ஆகும். உலகம் முழுவதற்குமான உற்பத்தி, சக்தி உருவாக்கம், உற்பத்திக்கான மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்தல் போன்ற எல்லாவற்றிற்கும் நீர் முக்கிய பங்கு வகிக்கின்றது.

### இலங்கையில் பாதுகாப்பான குடிதண்ணீர் விநியோகப்போக்கு

இலங்கையின் 2020 ஆம் ஆண்டில் உள்ளபடியான சனத்தொகைப் பரம்பல் மற்றும் துறை ரீதியான குடிநீர் விநியோக அளவு வீதம் தொடர்பான விவரங்கள் அட்டவணை 3 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 03**

| துறை | சனத்தொகை (மில்லியன் | சனத்தொகை வீதம் (%) | நீர் விநியோக எல்லை வீதம் |
|---|---|---|---|
| நகரம் | 4.0 | 18.2 | 88% |
| கிராமம் | 17.0 | 77.4 | 67% |
| பெருந் தோட்டம் | 0.9 | 4.4 | 54% |
| மொத்தம் | 21.9 | 100 | |

அட்டவணை 3 இல் காட்டியவாறு நகரத்துறையில் வாழும் மக்களில் 88 % மானவர்களுக்கு தூயகுடிநீர் பல்வேறு மூலங்களினால் வழங்கப்பட்டு வருகின்றது. ஏனைய 12 % மானவர்கள் சுயமாகத் தமது குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறே ஏனைய துறையினரும் குடிநீரைப் பெற்றுக் கொளகின்றனர். எனினும் 2025 ஆம் ஆண்டில் 100% மானவர்களுக்கு (சகல துறையினருக்கும்) நீர் வழங்குவதே நீர் வழங்கல் அமைச்சின் இலக்காகும். நீர்வழங்கல் அமைச்சின் கீழ் வருகின்ற தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை (NWSDB) மற்றும் நீர் வளச் சபை (WRB) ஆகியவற்றின் ஊடாக குறித்த 100% இலக்கை அடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### குழாய் நீர் விநியோகத்தின் அடைவு மட்டமும் இலக்கும்

இலங்கையில் குழாய் நீர் விநியோகம் தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் அடைவு மட்டமும் 2025 – 2030 வரையான காலப்பகுதிக்குரிய இலக்கும் அட்டவணை 4 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4**

| வருடம் | அடைவுமட்டம்/இலக்கு | வீதம்(%) |
|---|---|---|
| 2020 | அடைவு மட்டம் | 54% |
| 2025 | இலக்கு | 79% |
| 2030 | இலக்கு | 100% |

இலங்கையில் வாழும் சகலரும் குழாய் நீர் விநியோகம் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளும் 100% இலக்கை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் நீர்வழங்கல் அமைச்சு ஏற்கனவே எடுத்துள்ளது. அத்துடன் தந்திரோபாய அபிவிருத்தி இலக்குகளின் (SDG-6) பிரிவு 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்று 2030 ஆம் ஆண்டில் சகலருக்கும் தரமான குடிதண்ணீரை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் நீர் வழங்கல் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

### தற்போது குடிதண்ணீர் வழங்கப்படும் நீர் வழங்கல் மூலங்கள்

2020 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கப்படும் மூலங்கள் அட்டவணை 5 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 05**

| குடிநீர் வழங்கும் மூலங்கள் | வீதம் (%) |
|---|---|
| தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | 47% |
| உள்ளூராட்சி | 7% |
| ஏனையவை | 46% |
| மொத்தம் | 100% |

மொத்த நீர் வழங்கலில் 46% ஆனவை ஏனைய மூலங்களால் வழங்கப்பட்டு வருவது இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனால் அம்மூலங்களால் வழங்கப்படும் நீரின் தரத்தை நீர் வழங்கல் அமைச்சினால் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இது தொடர்பில்



தற்போது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு வரும் நீர்க் கொள்கை அறிக்கை முடிவுற்று அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இதற்கான முழுமையான தீர்வு எட்டப்படும்.

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பெறுமதிமிக்க நீர்!



கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா,
(தலைவர்,சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)



புவி மேற்பரப்பில் 71 வீதமான பகுதியில் நீர் பரந்துள்ளது. இந்நீர் விடயம் இன்று பாரிய பிரச்சினைக்கு உட்பட்டுள்ளது. குறிப்பாக மனிதருக்கு போதுமான அளவு நீர் ஆரம்ப காலத்தில் கிடைக்கப்பெற்ற போதும் அது இன்று தட்டுப்பாட்டிற்குரிய பொருளாக மாறிவருகின்றது. மனிதன் ஒரு நாளுக்கு 2,000 லீற்றர் தொடக்கம் 5,000 லீற்றர் வரை உபயோகிக்கின்றான். ஆனால் இன்று அந்த அளவு நீரானது கிடைக்கப் பெறாது மட்டுமல்ல தரம் குன்றிய நீரும் கிடைக்கின்றது. இதன் காரணமாக நீர் நெருக்கடிப் பிரச்சினை தோற்றம் பெறுகிறது.

உலகத்தில் 97.5 வீதம் உப்புச் சுவை கொண்ட நீர் உள்ளது. மிகுதியாக உள்ள 2.5 வீதம் சுத்தமான நீர். இதில் 2.24 வீதம் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகளாகவும், பனிக்கட்டிகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையிலும் உள்ளது. எஞ்சியுள்ள 0.26 வீதமான தண்ணீர்தான் குடி தண்ணீராகவும், விவசாயத்திற்கும் பயன்படுத்தும் நிலையிலும் உள்ளது. உலகில் கிடைக்கக் கூடிய சொற்ப அளவு குடிநீரும் கழிவு நீரால் மாசடைந்து விடுகின்றது. ஆண்டு தோறும் 40,000 தொன் கழிவுகள் நீரை மாசுபடுத்தி வருகின்றன. நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

உலகில் மூன்றில் ஒருவருக்குப் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. ஐந்தில் ஒருவருக்கு சுகாதாரமான நன்னீர் கிடைப்பதில்லை. உலகம் முழுவதும் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் சுகாதாரமற்ற தண்ணீரால் ஏற்பட்ட தொற்று நோயால் இறக்கின்றன எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் சுமார் 200 நகரங்களில் தண்ணீர் பஞ்சம் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதில் தென்னாபிரிக்காவில் உள்ள கேர்டவுண் நகரம் டேசிரோ (Day zero) எனப்படும் தண்ணீரில்லா நிலைக்கு சென்றுள்ளது நாம் அனைவரும் அறிந்ததே. மேலும் உலக அளவில் தென்னாபிரிக்கா, பிறேஷில், ஈரான், கம்போடியா, இந்தியா, சீனா, சிங்கப்பூர், லிபியா உள்ளிட்ட பதினொரு நாடுகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிக அளவில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலக தண்ணீர் தினம்

1993ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 47 ஆவது கூட்டத்தொடரில் உலக தண்ணீர் தினம் (world water day) அறிவிக்கப்பட்டது. நீர்நிலைகளைக் காப்பதும், நீர்வளத்தைப் பெருக்கு



வதும்தான் இத்தினத்தின் நோக்கம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை (theme) மையமாகக் கொண்டு 'உலக தண்ணீர் தினம்' அனுசரிக்கப்படுகின்றது. அந்த வகையில் இந்தாண்டிற்குரிய (2021) கருப்பொருளாக 'பெறுமதிமிக்க நீர்' (valuing water) என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

### உலக நீர் நெருக்கடி

உலகளாவிய ரீதியில் நீர் நெருக்கடியானது 40 நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. அவற்றுள் முக்கிய பிரதேசங்களாக ஆபிரிக்கா (சாகீல்), வெனிசுவேலா, கலிபோர்ணியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மியன்மார், இந்தியா, வட சீனா, மத்திய கிழக்கு நாடுகள், தென்னாபிரிக்கா ஆகியன காணப்படுகின்றன. ஒரு வருடத்தில் 280 கோடி மக்கள் நீர் நெருக்கடியால் பாதிக்கப்படுகின்றமையோடு நல்ல நீரினை 120 கோடி மக்கள் மாத்திரமே அருந்துகின்றனர். எனினும் உலகளாவிய ரீதியில் மழைநீர், மேற்பரப்பு நீர், தரைக்கீழ் நீர் ஆகியவற்றினால் 42.8 ட்ரில்லியன் கியூபிக் நீரானது கிடைக்கப் பெறுவதாக உலக விவசாய நிறுவனம் கூறுகின்றது. இவ்வாறான நீர் நெருக்கடியினால் ஒவ்வொரு வருடமும் 35 லட்சத்து 75 ஆயிரம் மக்கள் நோயினால் பாதிக்கப்படுவதோடு 0 - 14 வயதிற்கு உட்பட்டவர்களில் 84 வீதமானோர் இறக்கின்றனர். அத்துடன் 14 லட்சம் சிறுவர்கள் வாந்திபேதியால் பாதிக்கப்படுகின்றனர். 2005 - 2015 வரையான காலப்பகுதியில் 11 கோடி 20 லட்சம் மக்கள் இந்த நீர் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர் நெருக்கடிப் பிரச்சினையால் 2040ஆம்



ஆண்டுகளில் பொட்ஸ்வானா, எஸ்டோனியா, நமீயா, சில்லி ஆகிய நாடுகள் பாதிக்கப்படும் எனவும் 2030களில் ஆபிரிக்காவில் ஏழரைக் கோடி முதல் 25 கோடி மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

### நீர் நெருக்கடிக்கான காரணிகள்:

1. பூகோள வெப்பமடைதல்

பூகோளத்தில் ஏற்படும் அசாதாரண வெப்ப அதிகரிப்பின் காரணமாக பூகோள வெப்பமாதல் தோற்றம் பெறுகின்றது. இதனால் உலகில் 20 வீதமான நீர் நிலைகளில் நீர் வற்றிப்போகின்ற தன்மை காணப்படுகின்றது. IPCC இன் கருத்துப்படி ஏற்கனவே உலர்ந்த காலநிலை கொண்ட பிரதேசங்களில் பூகோள வெப்பநிலை காரணமாக மேலும் வெப்பத்தின் தீவிரத்தன்மை அதிகரிப்பால் நீர் நெருக்கடி ஏற்படுவதாக கூறுகின்றது. குறிப்பாக ஆபிரிக்காவில் சகேல் வலய நாடுகளினை கூறலாம்.

2. அளவிற்கதிகமான நீரினை பயன்படுத்தல்



உலகில் இன்று மக்கள் அளவிற்கு அதிகமான நீரினை பயன்படுத்துகின்றனர். குறிப்பாக மக்கள் மிதமிஞ்சிய நீரினை அளவிற்கு அதிகமாக பயன்படுத்தி வீண் விரயம் ஆக்குகின்றனர். இதனால் நீர் நெருக்கடி ஏற்படுகின்றது.

3. நீர் மாசடைதல்

நீர் மாசடைதலானது பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. குறிப்பாக நீரை முகாமை செய்து பாதுகாக்கும் திட்டமானது மக்களிடம் இல்லை என்றேதான் கூற வேண்டும். நீரினுள் எண்ணெய் கலப்பு, இரசாயன உள்ளீடு, குப்பைகளினை நீரில் கொட்டுதல் போன்றவற்றினால் நீர் மாசடைந்து காலப்போக்கில் நீர் நெருக்கடி ஏற்படுகின்றது.

4. வறட்சி

உலகின் சில பகுதிகள் வறட்சியின் மூலம் முழுமையான அளவு நீரைப் பெற்றுக் கொள்ள



முடியாதுள்ளது. குறிப்பாக வறட்சியின் காரணமாக நீர் நிலைகள் வற்றிப்போகின்ற சந்தர்ப்பத்தில் மக்களினால் தமக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகின்றது. இதனால் நீர் நெருக்கடி ஏற்படுகின்றது.

5. சனத்தொகை அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் சனத்தொகை அதிகரிப்பானது பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இன்று (2021இல்) உலக சனத்தொகை770கோடிஆகக்காணப்படுகின்றது. இது 2030 ஆம் ஆண்டுகளில் 1,120 கோடி ஆகவும் அதிகரிக்கும் என ஐக்கிய நாடுகள் சபை கூறுகின்றது. இதனால் அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகின்றது. இதனால் நீர் நெருக்கடி ஏற்படுகின்றது.

### நீர் நெருக்கடியினால் ஏற்படும் விளைவுகள்

1) விவசாயம் பாதிப்படையும்

உலகளாவிய ரீதியில் நீர் நெருக்கடி ஏற்படும் பொருட்டு விவசாயம் பாதிக்கப்படும். குறிப்பாக விவசாயத்திற்கு போதுமான நீர் கிடைக்காத போது விவசாய உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முதனிலை பொருளாதாரமாக விவசாயமே காணப்படுகின்றது. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு நாட்டின் அபிவிருத்தியும் பின்தள்ளப்படும். இந்தியாவில் 65 வீதம் முதல் 70 வீதமான மக்கள் விவசாயத்தை மேற்கொள்கின்றனர். பாகிஸ்தானில் 2025 ஆம் ஆண்டுகளில் 70 வீதமான மக்கள் விவசாயத்தினை மேற்கொள்வதினால் 3 கோடி 10 லட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என எதிர்வு கூறப்படுகின்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir




சில மாணவர்கள் மெய்நிகர் விரிவுரைகளின் போது தமது கருத்தூன்றலைத் தொலைத்து விடுகி றார்கள். நீண்ட காலத்திற்கு கருத்தூன்ற முடிவதில்லை, கவனத்தை இழக்கிறார்கள். நேருக்கு நேர் தொடர்பு இல்லாததால் சலிப்பு எளிதில் நிகழ்கிறது. ஆசிரியர்கள் தங்கள் ஒன்லைன் அமர்வுகளை மிரு துவாகவும், ஊடாடும் விதமாகவும் வைத்திருப்பது சில மாணவர்களுக்கு அதன் முக்கியத்துவத்தினை சில வேளைகளில் புரிந்துகொள்வதனை தவற வைக்கிறது.

# மெய்நிகர் வகுப்பறை

12

## Online Classroom

**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கொவிட் 19 இன் பெரும்பாதிப்பு, அதன் பயனாக புதிய சூழல் மெய்நிகர் வகுப்பறைகளை உருவாக்கியிருக்கின்றன என்பதனை இந்தத் தொடரில் பார்த்துவருகின்றோம். மெய்நிகர்வகுப்பு என்ற வாய்ப்பை நாம் எப்படி பயன்படுத்தி எமது கல்வியை மேம்படுத்த முடியும் என்பதைப் பார்ப்பது அவசியமானது. மெய்நிகர் வகுப்பறைகள் புதிய திறன்களைப் பெறுவதற்கும், புதிய தொழில் விருப்பங்களை ஆராய்வதற்கும் அல்லது புதிய பொழுதுபோக்கு மேம்பாட்டிற்கும் கல்வியை வழங்குவதற்கான பாதுகாப்பான மற்றும் எளிதான வழிகளில் இணைய வழிக் கற்றலை உருவாக்கிவருகின்றது. இந்த இணைய வழிக்கற்றல் கல்வியாளர்களை மேலும் மேலும் கற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. கற்றலுக்கான தேடல் அதிகரித்திருக்கிறது. மாணவர்களுக்கு பாடநெறிக்கு புறம்பான செயல்பாடுகள், தகவலறிந்த ஒன்லைன் அமர்வுகள், ஒன்லைன் மாநாடுகள் மற்றும் வெபினார்கள் ஆகியவற்றிற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருக்கின்றன. கொரோனா தாக்கத்தின் பின்னர் இ - கற்றலுக்கான தேவை கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் உலகம் முழுமையும் இந்த பெருந்தொற்று நோய்க்குப் பின் 'சமூக தொலைதூர' இடுகையைத் தழுவத் தொடங்குகிறது.

பெரும்பாலான கற்பித்தல் முறைகளைப் போலவே, மின் கற்றலும் அதன் நேர்மறைகளையும் எதிர்மறைகளையும் கொண்டுள்ளது. இவற்றைப் புரிந்துகொள்வது, பாடங்களை மிகவும் திறமையாக வழங்குவதற்கான உத்திகளை உருவாக்குவதற்கும் அதன் செயல்திறனை அளவிடுவதற்கும் உதவும்.

### மெய்நிகர் வகுப்பறையின் நன்மைகள்

கற்றல் செயல்முறையில் வினைத்திறனுடன் கற்றல் செயல்திறன் விருத்திக்கான படிப்பினைகளை வழங்க மின்கற்றல் மிகவும் திறமையான வழியை வழங்குகிறது எனலாம். பொதுவாக ஒரு முகக்கற்றலில் அதிகளவில் தங்கியிருந்த உலகம் தற்போது பலமுகக்கற்றலுக்கு வந்துள்ளது. அதே ஒரு பாடத்தினை நேரடியாக ஆசிரியரிடமிருந்து கேட்கின்ற அதேவேளை வீடியோக்களின் பயன்பாடு, வள இணைப்புகளைப் பகிர்வது, மதிப்பீட்டு சோதனைகளை வழங்குதல் அனைத்தும் ஒரு பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் செய்ய முடியும். கூடுதலாக, விரிவுரைகளை பதிவுசெய்து மீளமீளப்பார்க்கும் வசதியும் உண்டு. இதனால் பரவலான பார்வையாளர்களுக்கு கல்வி சென்றடைய வாய்ப்பேற்படுகிறது.

அதே வேளை நேரடியான வகுப்பறைக் கற்றலுடன் ஒப்பிடும்போது மின் கற்றல் மிகவும் மலிவு. அதாவது இரண்டு முக்கிய செலவு புள்ளிகளை நீக்குகிறது - பௌதீகவளங்களின் தேவை மற்றும் போக்குவரத்து ஆகிய இரண்டும் இன்று தேவையற்றனவாகின்றன. பாடநெறி அல்லது படிப்புக்கான உள்ளீடு அனைத்தும் ஒன்லைனில் கிடைக்கின்றன. அதனால் நீங்கள் விரும்பும்போதெல்லாம் பல தடவைகள் அதை அணுகலாம்.

மாணவர்கள் தங்கள் வீட்டின் வசதியிலிருந்து எப்போது வேண்டுமானாலும் எளிதாக அணுக முடியும் என்பதால், வகுப்புகளைத் தவறவிடுவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஏனென்றால், ஒரு நேரடி வகுப்பிற்காக மாணவர்கள் பள்ளிக்கு வர வேண்டும். ஆனால் இணையவழி பயன்முறையில், மாணவர் உலகில் எங்கும் அமர்ந்திருந்து ஏதொரு நாட்டின், பகுதியின் பாடங்களை அணுக முடியும். ஒரு டிஜிற்றல் சாதனம் மற்றும் இணைய இணைப்பு இருந்தால் மின் கற்றல் எந்த இடத்திலும் நிகழலாம். இன்று இணையக்கற்றலில் இருக்கும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டும் மிகப்பெரிய சாதகமான விளைவு கூச்ச சுபாவமுள்ள மாணவர்களை இந்தக்கல்வி ஊக்குவிக்கிறது என்பதாகும். வழக்கமாக ஒரு வகுப்பு சூழலில் கவனிக்கப்படாது புறமொதுக்கப்படும் மாணவர்கள் இணையவழி வகுப்புகளில் தம்மைத் திறக்



கிறார்கள். விடை பகிரக்கூடிய இடங்களில் உடனே தங்கள் விடைகளை பதிவிடுகிறார்கள். ஆசிரியருடனும் சகமாணவர்களுடனும் ஊடாடுகிறார்கள். அவர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். பதிலளிக்கிறார்கள். மகிழ்ச்சியாகப் பங்கு கொள்கிறார்கள். இது ஒரு வசதியான வீட்டுச் சூழல் காரணமாக இருக்கலாம்.

### மெய்நிகர்வகுப்பறைகளின் சவால்கள்

இவ்வாறான பல நன்மைகள் இருக்கின்ற அதே வேளை இணைய வழிக்கற்றலுக்கு முழுமையாகச் செல்வதற்கு இலங்கை போன்ற நாடுகளுக்கு பல சவால்களும் இருக்கின்றன. இதனால் இவற்றைச் சிந்தித்து ஒரு புதிய கலப்பு கற்றல் கற்பித்தல் திட்டத்துடன் கூடிய கல்விப்பொறிமுறை பற்றி ஆராய வேண்டியிருக்கிறது. இணையவழிக் கல்வி அனைவருக்கும் பொருந்தாது என்பதையும், அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தாது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். மாணவர்கள் ஆதிக்கம் செலுத்தும் கற்றல் பாணியைக் கொண்டுள்ள துறைகளில், முக்கியமாக விளையாட்டு போன்றவற்றில் புதிய வடிவில் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதாவது ஒரு மாணவன் ஒரு கற்றல் சாதனத்தின் முன் அமர்ந்து பாடத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய மின் கற்றல், அனைத்து கற்றல் முறைகளுக்கும் பொருந்தாது.

சில மாணவர்கள் மெய்நிகர் விரிவுரைகளின் போது தமது கருத்தூன்றலைத் தொலைத்து விடுகிறார்கள். நீண்ட காலத்திற்கு கருத்தூன்ற முடிவதில்லை, கவனத்தை இழக்கிறார்கள். நேருக்கு நேர் தொடர்பு இல்லாததால் சலிப்பு எளிதில் நிகழ்கிறது. ஆசிரியர்கள் தங்கள் ஒன்லைன் அமர்வுகளை மிருதுவாகவும், ஊடாடும் விதமாகவும் வைத்திருப்பது சில மாணவர்களுக்கு அதன் முக்கியத்துவத்தினை சில வேளைகளில் புரிந்துகொள்வதனை தவற வைக்கிறது.

மெய்நிகர் வகுப்பறைகள் முழுக்க முழுக்க தொலைத்தொடர்பு நிறுவனங்களில் தங்கியிருக்கும் தொழில்நுட்பத்தில் தங்கியுள்ளது. இணைப்புக்கான சிக்கல்கள் சீராக இல்லை, கடந்த 12 மாதங்களில் இணைய ஊடுருவல் வளர்ந்து வரும் நிலையில், தற்போதைய உள்கட்டமைப்பு, குறிப்பாக சிறிய நகரங்களில் தொடர்புக்கான சிக்னலை ஏற்படுத்துவது கடினமாகவே உள்ளது. ஆகவே இணைய இணைப்பில் காணப்படும் எந்த இடைவெளியும் குழந்தையின் கற்றலில் தொடர்ச்சியான பற்றாக் குறையை ஏற்படுத்தக்கூடும், இது கற்றலில் தீங்கு விளைவிக்கும், கற்றலில் சிரமங்கள் ஏற்படும்.

பொதுவாக கற்றல் என்பது சமூகத் தொடர்பு, மற்ற மனிதர்களைச் சுற்றி இருப்பதன் மூலம் மனிதர்கள் நிறைய கற்றுக்கொள்கிறார்கள். கொவிட் 19 பின்னரான சூழலில் துரதிர்ஷடவசமாக, பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்டிருக்கக்கூடிய அனைத்து தொடர்புகளையும் மின்கற்றல் பறிக்கிறது. கற்றலின் இன்றியமையாத பகுதியான யோசனைகளைப் பேச, சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள அல்லது விவாதிக்க மாணவர்கள் மற்ற மாணவர்களைச் சுற்றி இருப்பது எப்போதும் நல்லது. சகபாடியிடமிருந்து கற்றல் நிச்சயமாக வெற்றி பெறுகிறது. அது இணையவழிக் கற்றலில் துண்டிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் சமூக ஊடாட்டம் மற்றும் நடைமுறை அறிவைப் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

மின்கற்றல் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்துடன் நட்புடன் இருக்க வேண்டும் என்று கோருகிறது, இது துரதிர்ஷ்டவசமாக இப்போது மிகக்குறைவாக உள்ளதை அவதானிக்கலாம். ஆசிரியர்கள் தங்களது ஒன்லைன் வகுப்புகளை தடையின்றி நடத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த, சமீபத்திய தொழில்நுட்ப அறிவை புதுப்பிப்புகளுடன் தங்களை இணைத்துக் கொள்ள அதிக நேரம் முதலீடு செய்ய வேண்டும். அது போதாததாக இருக்கும் போது மாணவர்கள் ஆர்வம் குறைந்து கல்வியிலிருந்து இடைவிலகுவார்கள். ஆகவே இணையவழிக் கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் தம்மை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு அதனை மேம்படுத்த முடியும் என்பதை அடுத்த தொடரில் பார்க்கலாம்.

(தொடரும்....)

# மேலும் ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில் நியமனங்கள்!

## கோட்டா அதிரடி உத்தரவு



கொழும்பு, மார்ச் 22

மேலும் ஒரு லட்சம் பேருக்கு அரசதொழில் நியமனத்தை வழங்கவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்தசனிக்கிழமைநுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான யோம்புவெல்தென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' 15 ஆவது நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமூகத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு லட்சம் பேருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 35 ஆயிரம் பேருக்கு தற்போது தொழில்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு லட்சம் தொழில்வாய்ப்புக்களை வழங்கும் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் மேலும் ஒரு லட்சம் பேருக்கு தொழில்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதற்காக பொருத்தமானவர்களை தெரிவு செய்யும்போது சரியான ஆள்களை இனங்காண்பது கிராமிய அரச அதிகாரிகளினதும் மக்கள்பிரதிநிதிகளினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பயிற்றப்பட்ட ஊழியர்கள் இல்லாதிருப்பது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடைவதற்கு காரணமாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# குடும்பத்துக்குள் வாள் வெட்டு; வவுனியாவில் இருவர் படுகாயம்!

## தந்தை தலைமறைவு

வவுனியாவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சனி இரவு தனது மகளும், மனைவியும் வீட்டில் இருந்த நிலையில் கணவனால் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த அவர்கள் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

வாள்வெட்டில் ஈடுபட்ட நபர் தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# தீவிரவாதத்தை ஊக்குவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கண்டி,மாவனெல்லபகுதியில்தீவிரவாதத்தை ஊக்குவித்த குற்றச்சாட்டுக்காக 44 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த டிசெம்பர் 5 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்தபோது, அவரது நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டன எனவும், தீவிரவாதத்தைஊக்குவிப்பதற்காகஅவர்நன்கொடைகள் மற்றும் நிதிகளை சேகரித்தார் எனவும் கூறப்படுகிறது.

இந் நிலையில் கைதான நபரிடமிருந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மடிக் கணினியொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமின் உறவினருடன் அவர் தொடர்புபட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

# யாழ். இளைஞர்களை சந்தித்தார் சாணக்கியன்!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் யாழ் மாவட்ட இளைஞர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம், நீராவியடியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

"சமகாலஅரசியல்தொடர்பான இளைஞர்களின் எதிர்பார்ப்பு" எனும் தொனிப்பொருளில் இந்தக்கலந்துரையாடல்இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

# டக்ளஸுக்கும் அலுத்கமகேயுக்கும் மனோகணேசன் பாராட்டு தெரிவிப்பு!



யாழ். கச்சேரியிலிருந்து இரவோடிரவாக அநுராதபுரம் கச்சேரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட வடபகுதி காணி ஆவணங்கள் மீண்டும் யாழ். கச்சேரிக்கு கொண்டுவரப்பட்டமைக்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மஹிந்தானந்த அலுத்கமகே மேற்கொண்ட அதிரடியான நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது முகநூல் பதிவு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

%%வட மாகாண மாவட்டங்களின் காணி ஆவணங்கள் அநுராதபுர காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

இதை இடைநிறுத்தி, மீண்டும் அவற்றை யாழ். பிராந்திய அலுவலகத்துக்கே கொண்டுவர அமைச்சர்கள் மஹிந்தானந்த, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்ற செய்தி வந்துள்ளது.

இது உண்மையானால் மகிழ்ச்சியே. அவ்வாறாயின் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு எனது பாராட்டுகள்"- என்று பதிவிட்டுள்ளார்.

# அல்குவைதா மற்றும் தலிபான்களுடன் தொடர்புடைய குழுவினர் இலங்கையில்!

அலகுவைதா மற்றும் தலிபான் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்பு வைத்திருக்கும் இலங்கையின் மற்றுமோர் அமைப்பு பற்றிய விசாரணைகளை புலனாய்வுத்துறை ஆரம்பித்துள்ளது.

இஸ்லாமிக் ரிலிஜ் ஏஜன்ஸி எனப்படும் இந்த அமைப்பு, கிழக்கு மாகாணத்தை தளமாகக் கொண்டு தற்போதும் இயங்கிவருவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புலனாய்வுப்பிரிவு நடத்திய விசாரணையில், கட்டார், சவுதி உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளின் பல்வேறு அமைப்புக்களிடம் இருந்து சுமார் 24 கோடி ரூபா நிதி இந்த அமைப்புக்குக் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை வெளியாகிய திவயின பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

# பசறை விபத்தில் சிக்கிய டிப்பர் வாகன சாரதி கைது!

பசறையில் விபத்தில் சிக்கிய டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

45 வயதான சந்தேக நபர் சனிக்கிழமைமாலைபசறைபொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து நடந்த நேரத்தில் அவர் மதுபோதையில் இருந்தாரா என்பதை அறிய அவரது இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் இன்று நீதித்துறை மருத்துவ அதிகாரிகளினால் பெறப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்படும்.

இதேவேளை இந்த விபத்தில் உயிரிழந்த 14 நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், விபத்தில் காயமடைந்த நபர்களிடமிருந்து அறிக்கைகள் பதிவுசெய்யப்படும் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

பதுளை - பசறை 13 ஆம் கட்டை பகுதியில் தனியார் பஸ்ஸொன்று 200 அடி பள்ளத்தில் விழுந்து இடம்பெற்ற விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளமையோடு, 33 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொணராகலை - பதுளை பிரதான வீதியில் கடந்த சனிக்கிழமை காலை 7.15 மணியளவில், லுனுகலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பஸ் பயணித்த திசைக்கு எதிர் திசையில் வந்த டிப்பர் ரக வாகனத்துக்கு செல்ல இடமளிக்க முற்பட்டபோது , பஸ் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்துள்ளது.

# பெற்றோல் வாசனையை முகர்ந்த சிறுவன் சாவு!

தம்புள்ள – வெலமிடியாவ பகுதியில் மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தொட்டியில் இருந்து மூடியை அகற்றி பெற்றோல் வாசனை செய்யச் சென்ற 7 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை மதியம் நடந்துள்ளது.

இதில் தம்புள்ளை – வெலமிடியாவ ஆரம்பப்பள்ளியில் தரம் இரண்டில் கல்வி பயிலும் சஜித் குமார முனசிங்க என்ற 7 வயதுச் சிறுவனே உயிரிழந்துள்ளார்.

உறவினர்களின் கூற்றுப்படி, குழந்தை சனிக்கிழமை மதியம் தனது பாட்டி வீட்டுக்கு வந்து, வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி, மூடியை அகற்றி, பெற்றோல் வாசனையை முகர்ந்து பார்த்துள்ளார்.

இதன்போது மயக்க நிலையில் இருந்த குறித்த சிறுவனை கலேவெல வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைகளின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

மார்ச் 22 ஆம் நாள் உலக தண்ணீர் தினமாக கொண்டாடப்படுவது உங்களுக்கு தெரியுமா...??? 1992 ஆம் ஆண்டு யுனைடெட் நேஷன்ஸ் ஜெனரல் அசெம்பிலி (United Nations General Assembly) மார்ச் 22 ஆம் நாளை உலக தண்ணீர் தினமாக அறிவித்தது. இதன் பிறகு அந்த நாளில் தண்ணீரின் மகத்துவத்தை உணர்த்தும் வகையில் பல நிகழ்ச்சிகளும் கொண்டாட்டங்களும் இடம் பெற்று வருகின்றன.



தண்ணீர் இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்பதை அறிந்திருந்தும் அதனை அலட்சியமாக எடுத்துக் கொண்டு செயல்படும் மனித இனத்தை யோசிக்க வைப்பதற்காகவே இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. அதற்காக மார்ச் 22 அன்று ஒரு நாள் மட்டும் தண்ணீரை சேமித்தால் போதாது. தண்ணீரை சேமிக்க வேண்டும் என கருத்தை ஆழமாக மனதில் கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

### புதிய அரசமைப்புக்கான

# நிபுணர் குழுவை அமைக்கும்போது எம்முடன் கலந்தாலோசிக்கவில்லை

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குற்றச்சாட்டு



**புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாக தமிழ்த் தேசியப் பிரச்சினை உள்ள போதும், அரசமைப்பை வரைவதற்கான நிபுணர்கள் குழுவை அமைக்கும்போது, தங்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

**புதிய அரசமைப்பை வரைவதற்கான நிபுணர்கள் குழுவுக்கு, சம்பந்தன் இது குறித்த கடிதமொன்றை இம் மாதம் 18ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளார்.**

கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நிபுணர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட சந்திப்பு மற்றும் அதன் பின்னர் பெப்ரவரி 24 ஆம் திகதி அந்தக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதம் மூலம் தம்மால் முன்வைக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் சம்பந்தன் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டுக்கான புதியதோர் அரசமைப்பில் தீர்த்து வைக்கப்படவேண்டிய மிக முக்கியமான விடயம் தமிழ்த் தேசியப் பிரச்சினையேயாகும் என்ற போதிலும், ஜனாதிபதி உங்களுடைய குழுவை நியமித்த போது எங்களோடு கலந்தாலோ சிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

எனினும், உங்கள் குழு பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரிய போது, நாம் அந்த நடைமுறையில் மிக ஆக்கபூர்வமாக ஈடுபட்டு எமது ஆலோசனைகளை அனுப்பி வைத்தோம்.

அதன் பின்னர் உங்களது அழைப்பின் பேரில் நாம் உங்களைச் சந்தித்து, தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், கடந்த 33 ஆண்டுகளில் எட்டப்பட்ட கருத்தொருமைப்பாட்டு விடயங்களை இனங்காண்பதில் உங்களது குழுவோடு இணைந்து செயற்படுவதற்கான எமது விருப்பம் குறித்தும் மேலும் விரிவாக எடுத்துரைத்திருந்தோம்.

ஏற்கனவே வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் உங்களுக்கு அறிவிக்கப்பட்டவாறு, ஓர் ஐக்கிய, பிரிபடாத மற்றும் பிரிக்கமுடியாத நாடு என்ற வரையறைக்குள் தீர்வொன்றை காண்பதற்கு நாம் விரும்புகின்றோம். எனினும், அது இயன்றவரை அதிகூடிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு இட்டுச் செல்லும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையிலானதாக அமைந்திருக்க வேண்டும்.

இது, இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதோர், அரசமைப்பை வகுக்கும் உன்னதப் பணியில் உங்களோடு ஒத்துழைப்பதற்கான எமது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு நினைவூட்டுதலாகும் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், ஐ.நா. செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 9 ஆண்களும் 6 பெண்களும் பசறை விபத்தில் உயிரிழப்பு

பதுளை - செங்கலடி வீதி 13ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 32 பேர் பதுளை மாகாண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது எனவும் பசறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் வைத்திய அதிகாரி கே.எம். சமரபந்து தெரிவித்தார்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர். பதுளை மாகாண வைத்தியசாலையில் 16 ஆண்களும், 14 பெண்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 9 பேருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனவும், 2 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேட வைத்திய குழுக்களும், சுகாதார குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பதற்காக 8 அம்புலன்ஸ் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சி.சி.ரி.வி. காட்சிகளின்படி எதிர் திசையில் வந்த டிப்பர் ரக வாகனத்தைத் தாண்டி செல்ல முற்பட்ட வேளையிலே பஸ் வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தக் கோர விபத்து தொடர்பில் பசறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிரிழந்தவர்களின் சடலங்கள் இன்றும், நாளையும் நல்லடக்கம்

### சோகத்தில் மூழ்கியது பசறை

பதுளை, மார்.21

பதுளை - செங்கலடி வீதி 13ஆவது மைல்கல் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் பதுளை மாகாண வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து இன்று அதிகாலை 3 மணியளவில் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அவர்களது உடல்களை இன்றும், நாளையும் நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை அவர்களது குடும்ப உறவினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

லுணுகலை 24ஆம் கட்டைப் பகுதியில் உயிரிழந்த இரு இஸ்லாமிய சகோதரிகளின் உடல்கள் இன்று காலை நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. புகைப்படக் கலைஞர் டெனில் ஹரிஹரனின் உடல் ஹாலிஎல, குயின்ஸ்டவுனிலும், அடாவத்தை எல்ராடோவில் உயிரிழந்த கணவனும், மனைவியுமான நோவா, மெடோனா தம்பதிகளின் உடல்கள் அடாவத்தை புனித அந்தோனியார் ஆலயத்தின் சவச்சாலையிலும் இன்று மாலை அடக்கம் செய்யப்படவுள்ளன.

ஆசிரியர் முரளிதரனின் உடல் நாளை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. ஏனையோரின் உடல்களும் நாளை நல்லடக்கம் செய்யப்படவுள்ளன.

மீதும்பிட்டிய தொடக்கம் லுணுகலை வரையான பகுதிகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. வீதிகள் எங்கும் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. எங்கும் சோகமயமாகக் காட்சியளிக்கின்றன.

## ஓட்டோவில் பஸ்ஸை துரத்திச் சென்று ஏறிய தம்பதியும் பசறையில் மரணம்!



பசறை 13 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் பலியான பெருந்துயர் சம்பவமானது ஒட்டுமொத்த நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. குறித்த பஸ் விபத்தில் லுணுகலை அடாவத்தைப் பகுதியைச் சேர்ந்த அந்தோனி நோவா (வயது - 32), பெனடிக் மெடோனா (வயது 31) ஆகியோரும் உயிரிழந்தனர்.

இந்தத் தம்பதியினர் குறித்த பஸ்ஸை தவறவிட்டுள்ளனர். ஆனால், உரிய நேரத்தில் பதுளை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக ஓட்டோவில் ஏறிச் சென்று பஸ்ஸைத் துரத்திப் பிடித்து ஏறியுள்ளனர்.

சில வேளை பஸ் சென்றுவிட்டது, பிறிதொரு பஸ்ஸில் செல்வோம் என அவர்கள் நினைத்திருந்தால் இன்று உயிருடன் இருந்திருப்பார்கள். விதி யாரைத்தான் விட்டுவைத்தது என்று மட்டுமே தற்போது கவலையடைய முடியும் என்று அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.

அதிலும் குறிப்பாக அந்தோனி நோவா என்பவர் தனது பிறந்த நாளிலேயே உயிரிழந்தும் உள்ளார்.

## இந்தியப் பிரஜைகள் இருவர் நேற்று யாழில் இருந்து படலில் தப்பி ஓட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.21

இலங்கையில் இருந்த இரு இந்தியப் பிரஜைகள் நேற்றைய தினம் படகு வழியாக தமிழ் நாட்டிற்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் 2018ஆம் ஆண்டு இந்தியர்கள் இருவர் இலங்கைக் கடற்படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இருவரும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

2020ஆம் ஆண்டு நாட்டில் கொரோனா உச்சம் பெற்றதனால் இந்த இரு இந்தியப்பிரஜைகளும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

அப்படி ஈடுபட்ட சமயம் படகு உரிமையாளரின் முன் அனுமதி இன்றி நேற்றைய தினம் படகில் சென்று இந்தியாவின் இராமேஸ்வரத்தை அடைந்து இந்தியப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

## கசிப்பை பக்கெட் செய்து பார ஊர்தியில் விநியோகம்

### வெற்றிலைக்கேணியில் சிக்கியது



ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், மார்.21

பக்கெட் செய்யப்பட்ட கசிப்பை பார ஊர்தியில் எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபட்ட மூவர் வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடற்படையினரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

கசிப்பு விற்பனை இடம் பெறுவதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் நேற்றைய தினம் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியில் இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே கசிப்பைக் கைப்பற்றினர்.

இதற்போது பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டு பார ஊர்தியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட கசிப்பே கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. பார ஊர்தியில் இருந்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 பொதிகளில் 30 போத்தல் கசிப்பு கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

# ஐ.நாவில் பிரேரணை நிறைவேறினால் வெளிநாட்டுப் படைகள் இங்கு வரலாம்!

## தமரா குணநாயகம் எச்சரிக்கை




* பிரேரணை மீது இலங்கை வாக்கெடுப்பைக் கோர வேண்டும்
* தமிழ் மக்களின் விடயங்கள் துரும்புச் சீட்டாக மாற்றப்பட்டுள்ளது
* சீன எதிர்ப்புக்காக இலங்கையைப் பயன்படுத்துகிறது மேற்குலகம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தை முன்னேற்றுதல் என்னும் தொனிப்பொருளிலான பிரித்தானிய தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் கூட்டிணைந்து முன்வைத்துள்ள பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் வெளிநாட்டு படைகள் இலங்கையில் தங்கு தடையின்றி பிரசன்னமாகலாம் என்று ஐ.நாவுக்கான (ஜெனிவா) முன்னாள் வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்தார்.

நிறைவேற்றப்படும் பிரேரணை தமிழ் மக்களின் விடயங்களுக்கு பொறுப்புக்கூறுவதற்கானவை என்று விம்பப்படுத்தப்பட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், இந்தியாவுடன் இணைந்து இலங்கையின் கேந்திரஸ்தானத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி பூகோள ரீதியான சீன எதிர்ப்பை முன்னெடுப்பதே இலக்காகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், இலங்கை அரசாங்கம் பிரேரணையை நிராகரிப்பதாக தொடர்ச்சியாக கூறிவருகின்றது. உண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அப்பிரேரணை பெயரிட்டு அறிவிக்கப்பட்டதும் இலங்கையின் சார்பில் உறுப்புரிமை கொண்ட நாடொன்று வாக்கெடுப்பினைக் கோர வேண்டும். அவ்வாறு கோராது நிராகரிப்பதாக பூச்சாண்டி காண்பித்துக்கொண்டிருப்பதால் எவ்விதமான பயனுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையின் உள்ளடக்கம் மற்றும் அப்பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஏற்படவுள்ள அடுத்தகட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு ஜனநாயக மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்ட தருணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளே கோரப்பட்டிருந்தன. ஆனால் இந்திய விமானப்படைகள் உலருணவுப்பொருள்களை வடபகுதியின் வான்பரப்பில் பறந்து வழங்கியிருந்தன.

அதன் பின்னர் ஓரிரு மாதங்களுக்குள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படைகள் வரவழைக்கப்பட்டன.

இந்திய அமைதிகாக்கும் படைகள் வடபகுதிக்கு வந்த வேளையில் அங்கிருந்த நிலைமைகளை அனைவரும் அறிவர். விடுதலைப்புலிகள் கூட அமைதிகாக்கும் படைகளை எதிர்த்திருந்தனர் என்றால் நிலைமைகளை அனைவரும் புரிந்து கொண்டிருந்தனர் என்பது தான் அர்த்தமாகும்.

இந்த நிலையில் தற்போதும் அவ்விதமான நிலைமையொன்றை ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையின் கேந்திர ஸ்தானத்தை அடிப்படையாக வைத்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையின் முழுப்பகுதியையும் தங்கு தடைகளின் தமது படைத்தரப்புக்கள் உள்ளிட்ட சுயநலன்களுக்கு பயன்படுத்தவே அதிகளவில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளன.

அத்துடன் அமெரிக்காவின் பூகோள சீன எதிர்ப்பின் ஓர் அங்கமாக இந்து - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னத்தை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவை முன்னிலைப்படுத்தி இலங்கையைப் பயன்படுத்தவே விளைகின்றன. இதற்காகவே அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ள நான்கு நாடுகளின் கூட்டான 'குவாட்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாலைதீவு, இலங்கை, இந்தியா பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக அமெரிக்கா தனது படைகள் இலங்கையின் விமானநிலையங்கள், துறைமுகங்களை சுதந்திரமாக பயன்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே 2017இல் 'எக்ஸா' உடன் படிக்கையை கைச்சாத்திட்டதன் மூலமாக கணிசமான அளவில் இலங்கையில் பாதுகாப்பு படைகள் கூட்டுப்பயிற்சிகளையும் திறந்த பயணங்களையும் மேற்கொள்கின்றன. இந்த நிலைமையை மேலும் மேம்படுத்தவே எம்.சி.சி. மற்றும் சோபா ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அமெரிக்க முனைந்து வருகின்றது.

தற்போதைய நிலையில் எம்.சி.சி. ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் திரைமறைவில் தனியார் மயப்படுத்தலின் ஊடாக வளங்கள் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களின் பின்னணியுடன் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. இது நாளடைவில் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு முழுமையாகச் சென்றுவிடும் நிலையே உள்ளது.

இந்நிலையில், 'சோபா' ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு பெருமளவான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதுவும் படைகளின் பிரசன்னத்தை அடிப்படையாகக் கொண்டவை தான்.

இந்தப் பின்னணியில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், மனிதாபிமான செயற்பாடுகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட விடயப்பரப்புக்கள் காணப்படுகின்றன.

இந்தத் 'தலைப்புக்களின் கீழேயே' அண்மைய தசாப்தத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் படைகள் பிற நாடுகளுக்குள் பிரவேசித்துள்ளன. உதாரணமாகக் கூறுவதாயின், ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மேற்குலகப்படைகள் பிரவேசித்தமையை காணக்கூடியதாக உள்ளது.

சிரியாவிலும் அவ்வாறான நிலைமை காணப்பட்ட போதும் அங்கு அப்படைகளின் இலக்குகள் வெற்றிபெறவில்லை. ஆகவே இந்த விடயத்தில் இலங்கைப் பிரஜைகள் அனைவரும் பொறுப்புடனும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

### துருப்புச்சீட்டாகும் தமிழ்மக்கள்

தமிழ் மக்களின் மீது அதிகளவான கரிசனைகளைக் கொண்டே மேற்குலக நாடுகள் ஐ.நா. அரங்கில் பிரேரணைகளைக் கொண்டுவருவதாகக் காண்பிக்கின்றது. இதனை தமிழ் மக்கள் நம்பி ஏமாந்துவிடக்கூடாது.

இதில் இந்தியாவுக்கும் பங்குகள் உள்ளன. இந்திய, மேற்குல கூட்டு, தமிழர்களின் விடயத்தை வைத்தே இலங்கையின் சீனாவுக்கு எதிரான தமது காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றன என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த வலைக்குள் தமிழ் மக்கள் சிக்கிக் கொண்டால் உள்நாட்டில் இனங்களுக்கு இடையிலான பிரிவினைகளே அதிகமாக இருக்கும்.

இதனால் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படாது மேலும் மேலும் அதிகரித்தே செல்வதற்கு வித்திடுவதாக இருக்கும். ஆகவே தாம் பிறிதொரு தரப்பின் நலன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றோம் என்பதை தமிழ் மக்கள் பூரணமாக விளங்கிக்கொள்ளவது அவசியமாகின்றது.

### அரசு வாக்கெடுப்பைக் கோருதல் வேண்டும்

தற்போதைய அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை தொடர்பிலான விடயப்பரப்பு முன்னெடுக்கப்படும் தருணத்தில் உறுப்புரிமை கொண்ட நாடொன்றைப் பயன்படுத்தி வாக்கெடுப்பைக் கோர வேண்டும். அதனைவிடுத்து வெறுமனே பார்வையாளராக இருந்துவிட்டு பிரேரணையை ஏற்கவில்லை. தீர்மானத்தினை நிராகரிக்கின்றோம் என்று கூறுவதால் எவ்விதமான பயனுமில்லை. இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பினைக் கோருவதன் ஊடாகவே சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றது என்பது வெளிப்படும். இந்த விடயத்தினை பலர் அறிந்திருப்பதில்லை.

வெறுமனே இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதாக ஊடகங்களுக்கு கூறிவருவதால் ஜெனிவாவில் எதுவும் நிகழ்ந்துவிடாது.

தீர்மானம் நிறைவேற்றப்படும் போது இலங்கையும் பார்வையாளராக இருக்குமே தவிர அந்தசந்தர்ப்பத்தில் இலங்கையால் எதனையும் பிரதிபலிக்க முடியாது.

ஆகவே வாக்கெடுப்பினைக் கோருவதே பொருத்தமான செயற்பாடு. அதற்காக உறுப்புரிமை கொண்டதொரு நாட்டைத் தயார்படுத்தவேண்டியது கட்டாயமாகின்றது. அவ்விதமான செயற்பாடு இம்முறை நடைபெற்றதா என்பது கேள்விக்குறியாகின்றது. ஆனால் பிரேரணையை நிராகரிப்பதாகத் தொடர்ச்சியாக கூறப்படுகின்றது. இறுதியாக எமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளிக்க முடியாது. அமைதியாக இலங்கை அமர்ந்திருந்தால் அது பிரேரணையை ஏற்றுக்கொள்வதாகவே அமையும். - என்றார்.

## நீரின்றி அமையாது...

(06 ஆ.ம் பக்கத் தொடர்ச்சி)

### பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பான சவால்கள்

பாதுகாப்பு மற்றும் தரமான குடிதண்ணீரை வழங்கும் போது நீர் வழங்கல் அமைச்சு பின்வரும் சவால்களை எதிர்கொள்கிறது :-

01. நீர் மூலங்களில் இருந்து நீரைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிக்கல்கள்.
02. விவசாயிகளுடன் நீரைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள சிக்கல்கள்.
03. நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதில் உள்ள பிரச்சினைகள்.
04. கழிவுப் பொருள்களை நீர் நிலைகளில் இடுவதைத் தடுப்பதற்கான உரிய சட்டங்கள் இல்லாமை.
05. குடிதண்ணீர் பெற்றுக் கொள்வதற்குரிய நீர்த் தேக்கங்கள் இல்லாமை.
06. நீர் நிலைகளை உருவாக்குவதற்கு ஏதுவாகக் காணி சுவீகரிப்பு நடவடிக்கையில் நிலவும் காலதாமதம்.
07. நீர் விநியோகத்தின் போது சாதி மத மற்றும் பிரதேசவாதங்கள் மற்றும் முரண்பாடுகள்.
08. குழாய் நீர் விநியோக சேவைக்கான உயர்ந்த கட்டணம்.

மேலே கூறப்பட்ட சவால்கள் விரைவான குடிநீர் விநியோகத்தில் தடங்கல்களை ஏற்படுத்தும் என்பதனால் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் புதிய குடிதண்ணீர் விநியோகக் கொள்கை அறிக்கையில் இவை தெளிவாக ஆராயப்பட்டு தீர்க்கப்படும். இந்நிலையில் இலங்கை மக்கள் யாவரும் தரமான தூய குடிநீரைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

'நீரே வாழ்க்கை; அது மக்களின் அடிப்படை மனித உரிமை'

**க.தெய்வேந்திரம்,**
(SLAS-Sp.Gr, MA - Econ, MA - RP, MBA)
**மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)**
**நீர் வழங்கல் அமைச்சு, பத்தரமுல்ல.**

## பெறுமதிமிக்க நீர்...

(07 ஆம்பக்கத் தொடர்ச்சி)

**2) வறுமை நிலை உண்டாகும்**

நீர்பற்றாக்குறை காரணமாக மக்கள் தமது விவசாயம், கைத்தொழில் மற்றும் வேறு தொழில்களைச் செய்ய முடியாது போகின்ற நிலை உருவாகும். இதன் காரணமாக மக்கள் வருமானத்தினை பெற முடியாத சூழ்நிலை உருவாகும். இதன் காரணமாக வறுமை நிலை ஏற்படும். 2018ஆம் ஆண்டுகளில் 18 நாடுகள் வறுமையினால் பாதிக்கப்பட்டதோடு 2030ஆம் ஆண்டுகளில் 42 நாடுகள் வறுமையினால் பாதிக்கப்படும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. ஆபிரிக்காவில் 43 கோடி 10 லட்சம் மக்களும், ஆசியாவில் 16 கோடி முப்பது லட்சம் மக்களும், தென்னமெரிக்காவில் 10 கோடி பத்து லட்சம் மக்களும் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**3) பஞ்சம், பசி, பட்டினி ஏற்படும்**

நீர் நெருக்கடி காரணமாக வறுமை நிலை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் பஞ்சம், பசி, பட்டினி ஆகியன ஏற்படுகின்றது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் சூடானில் உணவுப் பஞ்சத்தினால் 28 லட்சம் மக்களும், எத்தியோப்பாவில் 80 லட்சம் மக்களும், 14 லட்சம் சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சோமாலியாவில் 10 லட்சம் மக்களும், 3 லட்சம் சிறுவர்களும், உகண்டாவில் 55 லட்சம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**4) நோய்கள் உண்டாகும்**

நீரானது அசுத்தமாகின்ற போது நீர் நெருக்கடி ஏற்படுகின்றது. இவ்வாறான அசுத்த நீரினால் பக்ரீரியா, பங்கசுக்கள் பரவும் போது வாந்திபேதி, கொலரா, டயரியா, யானைக்கால் நோய் போன்றன ஏற்படுகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் 14 லட்சம் மக்கள் டயரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**5) அபிவிருத்தி தடைப்படும்**

குறிப்பாக நீர் நெருக்கடி காரணமாக அபிவிருத்திகள் தடைப்படுவதினை அவதானிக்கலாம். நகராக்க செயற்பாடுகள் என்பது இன்றைய துரித உலகில் நடைபெற்று வருகின்ற ஒரு செயன்முறையாகும். இவ்வாறான நீர் நெருக்கடி காரணமாக நகராக்க செயற்பாடுகள் தடைப்படும். இதனால் அபிவிருத்தியும் தடைப்படும்.

**நீர் நெருக்கடியினை குறைப்பதற்கான வழிமுறைகள்**

1) நீரினை முகாமைத்துவம் செய்தல்.
2) தொழில்நுட்ப வசதிகளை அதிகரித்தல்.
3) வினைத்திறன் மிக்க விவசாய உற்பத்திகளினை மேற்கொள்ளல்.
4) சிறப்பான கல்வி முன்னேற்றத்தினை ஏற்படுத்தல்.
5) மக்களிடையே நீர் தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.
6) அரசாங்கம் நீர் நெருக்கடி பற்றியும், நீரினைப் பாதுகாக்கவும் சட்டங்களை அமுல்படுத்தல் வேண்டும்.

இவ்வாறான இயற்கை வளங்களில் ஒன்றான நீர் மனிதனது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய பல்வேறு வழிகளில் பயன்படுகின்றது. உலகில் காணப்படுகின்ற நீரில் மிகச்சிறிய அளவே மனிதப் பயன்பாட்டிற்கு உரியது. அதுவும் பல்வேறு வழிகளில் மாசடைந்து நீர் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. நாம் இனியும் தண்ணீரினைச் சேமிக்காமல், சிக்கனமாகப் பயன்படுத்தாமல், அலட்சியமாக இருந்தால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரே சில ஆய்வாளர்கள் கூறியது போன்று அடுத்த (மூன்றாம்) உலகப்போர் தண்ணீருக்காக நடந்து விடுமோ என்ற அச்சம் மனதில் எழுகின்றது. எனவே உலக தண்ணீர் தினமான இன்றைய நாளில் தண்ணீரினை மாசுபடுத்தாமல் 'உயிர் போல் காப்போம்' எனும் உறுதிமொழியை மனதில் ஏற்று அதனை நிறைவேற்ற பாடுபடுவோம்.

# புலிகள் குறித்து கரிசனை காட்டும் மேற்குலகம் பொது மக்களில் அக்கறை கொள்ளாதமை ஏன்?

## சரத் வீரசேகரவுக்கு வந்த சந்தேகம்



விடுதலைப் புலிகளின் போராளிகள் குறித்து கவனம்கொள்ளும் மேற்குலகம் பொது மக்கள் தொடர்பில் கவனம் கொள்ளாதமை கவலையளிக்கிறது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்தோடு, ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மனிதஉரிமைபேரவையில்இலங்கைக்கு எதிராகமுன்வைக்கப்பட்டுள்ளதீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு இன்று (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம்குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர் –

30 வருடகால சிவில் யுத்தம் இலங்கையின் சுதந்திரத்துக்காகவே முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் போராளிகள் குறித்து மாத்திரம் மேற்குலகம் கவனம் செலுத்துவதாகவும் அவர் சாடினார்.

மேலும் யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு தவிர்த்து ஏனைய மாகாணங்களில் புலிகளின் தாக்குதலால் உயிரிழந்த அப்பாவி மக்கள் தொடர்பில் கவனம்கொள்ளாதமை கவலைக்குரியது எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எந்த நாடுகளையும் பகைத்துக்கொள்ளாமல் ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும் எனவும் அவர் தெரிவித்தார்.

தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில விடயங்களை நாட்டின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசமைப்பிற்கு உட்படுத்தி உள்ளக பொறிமுறை ஊடாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# யோகர் சுவாமிகளின் 57 ஆவது குருபூசை!

யோகர் சுவாமிகளின் 57 ஆவதுகுருபூசைதினம்எதிர்வரும் வியாழக்கிழமை சிவ தொண்டன் நிலைய புராண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வியாழக்கிழமை முற்பகல் 09.30மணிமுதல்சிவதொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் யோகசுவாமிகளது திருமேனிக்கு திவ்யமான அபிஷேக ஆராதனை நிகழும். நண்பகல் மகேஸ்வர பூசை நிகழும்.

சிவதொண்டன் நிலையத்தில் குருபூசை தினத்துக்கு முற்பட்ட மூன்று நாள்களும் வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாள்களாக அனுட்டிக்கப்படும். இந் நாள்களில் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும்.

இந்த நிகழ்வுகளில் அன்பர்களைக் கலந்து கொண்டு சுவாமிகளின் திருவருளைப் பெற்றுக் கொள்ள ஆதரம் பெருக அழைக்கின்றோம் என சிவ தொண்டன் சபையினர் தெரி வித்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கை பௌத்தமயமாக்குவதே தொல்லியல் திணைக்களத்தின் இலக்கு!

## மாவை சேனாதிராசா காட்டம்



வடக்கு, கிழக்கை பௌத்த மயமாக்குவதை இலக்காக வைத்து தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி – உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தொல்லியல் அடையாளமிருப்பதாகக் கூறி தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை மேற்கொள்ள உள்ள நிலையில் இதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக நேற்று ஆலய நிர்வாகத்தினருக்கும், தமிழ் அரசியல் தரப்புக்களுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலயத்தின் தொன்மைகள் தொடர்பாகவும் வரலாறுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே மாவை சேனாதிராசா இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் அனைத்து விடயங்களிலும் போராட வேண்டிய நிலையில் உள்ளோம். அரசாங்கத்தின் தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் இராணுவத்தினர் பௌத்த பிக்குகள் சிலர் இங்கு வந்து சென்றுள்ளமையுடன், வருகின்ற 23 ஆம் திகதி அகழ்வுகளில் ஈடுபடவுள்ளனர் என அறிய முடிகின்றது.

இந்த ஆட்சி, எங்களுடைய நிலங்கள் பாரம்பரியங்கள் இருக்கின்ற தெய்வ சந்நிதிகளிலே தங்களது பௌத்த சமயத்தை நிலைநாட்டுவதற்காக தொல்லியல் திணைக்களம் என்னும் குழுவை உருவாக்கிக் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்களது பௌத்த அடையாளங்கள் இருப்பதாகக் கூறி பௌத்த ஆலயங்களை நிலைநாட்டுவதாகவும் பரம்பெருக்களாக நாங்கள் ஆண்டு இருக்கின்றோம் என்பதை நிரூபிப்பதற்காக தங்களது விருப்பப்படி தனியே பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட குழுவை நியமித்து உள்ளனர்.

பல ஆயிர வருடங்களாக இருக்கும் இந்த ஆலயத்தை ஆராய்ச்சி செய்து பார்க்க இவர்கள் நிற்கின்றார்கள்.

இந்த இடத்தை இராணுவத்தினர் பல வருடங்களாக ஆளுகைக்குள் வைத்திருந்தனர். அவர்களே இந்த ஆய்வைச் செய்யப் பௌத்த குருமாருடன் ஆர்வமாக உள்ளனர். இவற்றைத் தடுப்பதற்கு நாங்கள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தம்மிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து தடை உத்தரவைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும் எங்களுடைய பிரதேசங்களை மற்றும் எங்களுடைய தெய்வங்கள் இருக்கின்ற இடங்களைப் பௌத்த ஆலயங்களாக அடையாளங்களாக உருவாக்கி அதனை நிரூபித்து இந்தப் பிரதேசம் தங்களுடையதென்றும் இந்த பூமி எங்களுடையது அல்ல தம்முடையது என வரலாற்று ஆவணங்களைத் தயாரிப்பதற்கு முயல்கின்றார்கள்.

இதற்கு நாங்கள் இடம் கொடுக்காது எமது மண்ணை நாங்கள் காப்பாற்ற சட்ட நடவடிக்கை மற்றும் போராட்டங்களை நடத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஹோட்டல் ஊழியர்கள் மீது தாக்கு; ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்!

குருணாகல் பகுதியில் ஹோட்டல் ஊழியர்கள் இருவரின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப்பொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

குருணாகல் நகரத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு, கடந்த சனிக்கிழமை மாலை வந்துள்ள நபரொருவர் அதன் ஊழியர்கள் மீது கண்ணாடி போத்தலால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, ஹோட்டலுக்கு வந்துள்ள சந்தேக நபர் ஹோட்டல் ஊழியர்களிடம் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளமையுடன், பின்னர் கண்ணாடி போத்தலால் இரு ஊழியர்களைத் தாக்கியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, காயமடைந்த ஊழியர்களிருவரும் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களுள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கலேவெல பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2021 இல் வெளியிடப்பெற்றது.